
# ஆத்திசூடி கதைகள்

தொகுதி 4



அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு, கொழும்பு 11
தொலைபேசி : 334004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலா

வட்ட நிலா - உயர்
வான் நிலா!
பொட்டு நிலா ! எழில்
பூத்த நிலா

வெள்ளி நிலா - மேல்
வீதி நிலா!
அள்ளும்நிலா - நல்
அழகு நிலா!

பட்டு நிலா - ஒளி
பாய்ச்சும் நிலா
தட்டு நிலா - வானில்
தவழும் நிலா!

முத்து நிலா! - இது
முழுமை நிலா
சித்திரம் போல் - வந்து
சிரிக்கும் நிலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடிக் கதைகள்

## தொகுப்பு - 4

ஆக்கியோன்
**கே.வி. குணசேகரம்**
அதிபர்
யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.

*பதிப்பாசிரியர்*
**ஆறுமுகம் கந்தையா J.P அவர்கள்**

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**

320, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி : 334004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் அதிபராக விளங்கும் திரு. கே. வி. குணசேகரம்** அவர்கள் ஒரு ஆசிரியர், கல்வியாளர் கல்வி நிர்வாகி என்ற ஆளுமைகளுக்கு அப்பால் தம்மை இனங்காட்டிக் கொண்டுள்ள ஒரு துறை படைப்பிலக்கியத்துறை ஆகும். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம் மற்றும் கட்டுரை ஆகிய பல் துறைகளிலும் அவர் கால் பதித்தவர் குறிப்பாக சிறுகதை, நாவல் என்பவற்றில் பல்வேறு பரிசுகள் பெற்றதன் மூலம் அத்துறைகள் சார் வாசகர்கள் மற்றும் படைப்பாளிகளது கவனத்தை ஈர்ந்தவர்.

**திரு. கே. வி. குணசேகரம்** அவர்கள் இவ்வாறான சமூக விமர்சனப் பார்வை கொண்ட ஒரு கல்வியாளர் அவ்வகையில் ஒரு விமர்சனயதார்த்தவாத எழுத்தாளராகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முயன்றவர். அவர் சமூக மாந்தரை இரத்தமும் சதையுமாக எம்முன் நிறுத்தும் பாங்கு அருமையானதாகும். ஒவ்வொரு கதா பாத்திரத்தையும் அதன் உணர்வு நிலைகளை அடையாளங் காட்டக் கூடிய வகையில் பேச்சு வழக்கு, மொழிநடை, மற்றும் உடல் சார் வருணனைகளுடன் நமது நேரடிப் பார்வைக்கு இட்டு வருகிறார்.

குறிப்பாக அறமும் நீதியும் நிறைந்த மரபுகள் நமக்கு வழமாக இருந்தும் அவை பேணப் படாமலே அழிந்து கொண்டு போகின்றது. என்ற ஆதங்கம் அவரது எழுத்துக்களில் உண்டு. ஆத்திசூடிக் கதைகள் மூலம் ஒரு போதகனாக இருந்து சமூகத்திற்குப் போதனை செய்கிறார். இவ் ஆத்திசூடிக் கதைகள் பெரியதொரு மாற்றத்தை உண்டு பண்ணுமென நம்பலாம்.

கலாநிதி. **நா. சுப்பிரமணியன்**
(முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்)
யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் உரை

**குலபதி ஆறுமுகம் கந்தையா J.P** அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆத்திசூடி சூத்திரங்களுக்கு கதை எழுத இறையருள் கிட்டியுள்ளது. இதற்கான கதைகள் பகுதி பகுதியாக வெளிவரும். நான் பத்துக்கு மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளேன். நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை வானொலிக்காகவும் எழுதியுள்ளேன். ஒரு சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. சமூகத்தைப் பற்றியும் அங்கு நடைபெறும். ஊழல்களைப் பற்றியும் எழுதிய போது உள்ளம் குமுறி நோய்வாய்ப்பட்டு பகைமையைத் தேடிக் கொள்ள முடிந்ததே தவிர அமைதியை, நிம்மதியைப் பெறமுடியவில்லை. ஆத்திசூடிக் கதைகளை எழுதியதன் மூலம் என்றுமில்லாத இன்பத்தைப் பெற முடிந்தது. நிம்மதியைப் பெற முடிந்தது. மனச்சாந்தி கிடைத்தது. இக்கதைகள் சிறுவர்களுக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்குக் கூடப் பயன்தரவல்லது. சிறுவர்கள் பயன்பெறவும் பெரியவர்கள் கைக்கொள்ளவும் இக்கதைகள் உதவுமென நம்புகிறேன். ஆத்திசூடிச் சூத்திரங்கள் இரண்டு சொற்களை மட்டும் கொண்டவையே அதிகமானவை உலகைச் சீர்திருத்த இரண்டு சொற்கள் போதுமென்று ஔவையார் நினைத்தார் போலும் இரண்டு சொற்களுக்குள் பொதிந்துள்ள அறக்கருத்துக்கள் எண்ணில் அடங்காதவை. அந்த வகையில் வேத உபநிடத கருத்துக்களுடன் அறக் கருத்துக்களையும் சேர்த்து பஞ்சாமிர்தம் போன்ற ஔவையார் அருளிய ஆத்திசூடி; கொன்றை வேந்தன் சூத்திரங்களுக்கு விளக்கமும் கதையும் எழுத வாய்ப்பளித்த குலபதி. ஆறுமுகம் கந்தையாவுக்கும் எழுத்துப் பிரதிகளை சரிபார்த்து உதவிய **திரு. பொ. இராசதுரை, திருமதி. சா. வாகீசன், செல்வி. நிஷியாமளா மகாலிங்கம்** ஆகியோருக்கு நன்றிகள், மீண்டும் சந்திப்போம்.

கே. வி. குணசேகரம்
அதிபர்
யா/கோப்பாய்நாவலர் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஔவையார் அருளிச் செய்த ஆத்திசூடி மூலமும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் திருத்தப்பட்ட உரையும்**

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தி தொழுவோமியாமே

பதவுரை: ஆத்தி - திருவத்திப் பூ மாலையை, சூடி- தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த - விரும்பிய, தேவனை - பிள்ளையாகிய விநாயகக் கடவுளை, ஏத்தி ஏத்தி - துதித்துத் துதித்து தொழுவோம் - வணங்குவோம். யாம் - நாங்கள் என்றவாறு தேவன் - பிள்ளை ஏ - ஈற்றசை.

## 1. இயல்பலாதன செயல்

ப - ரை: இயல்பு அலாதன - (தருமநூலுக்குப்) பொருத்தமல்லாதவைகளை, செயேல் - நீ செய்யாதே.

## 2. அரவ மாட்டேல்

ப - ரை: அரவம் - (நஞ்சையுடைய) பாம்புகளை, ஆட்டேல் - (நீ பிடித்து) ஆட்டாதே.

## 3. இலவம்பஞ்சிற் றுயில்

ப- ரை: இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சுமெத்தையிலே, துயில் - நீ நித்திரை செய்.

## 4. வஞ்சகம் பேசேல்

ப - ரை: வஞ்சகம் - கபட வார்த்தைகளை, பேசேல் - நீ பேசாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. அழகலாதன செயேல்

ப - ரை: அழகு அலாதன - (நீ துன்பப்பட வந்த காலத்தும், இழிவுள்ள செயல்களை, செயேல் - செய்யாதே. அழகுடையன உயர்வுள்ள செயல்கள் ஆதலால் அழகலாதன இழிவுள்ள செயல்கள் என்பதாம்.

## 5. இளமையிற் கல்

ப - ரை: இளமையில் - இளமைப் பராயத்திலே,

கல் - (நீ வித்தையைக்) கற்றுக்கொள்.

## 6. அறனை மறவேல்

ப - ரை: அறனை - தருமத்தை, மறவேல் - (நீ ஒரு போதும்) மறவாதே.

## 7. அனந்தலாடேல்

ப - ரை: அனந்தல் - நித்திரையை, ஆடேல்

(நீ அதிகமாகச்) செய்யாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இயல்பலாதன செயல் | 01 |
| 2. | அரவ மாட்டேல் | 09 |
| 3. | இலவம்பஞ்சிற் றுயில் | 16 |
| 4. | வஞ்சகம் பேசேல் | 24 |
| 4. | அழகலாதன செயேல் | 29 |
| 5. | இளமையிற் கல் | 38 |
| 6. | அறனை மறவேல் | 45 |
| 7. | அனந்தலாடேல் | 53 |


விலை ரூபா 60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. இயல்பலாதன செய்யேல்

நல்லைபுரத்தில் புராதன அம்மன் ஆலயம் ஒன்றிருந்தது. அவ்வாலயம் மிகவும் சிறப்பானது. அங்கு வீற்றிருக்குஞ் சிவகாமி அம்மன் அவ்வூர் மக்களின் துன்பங்களைப் போக்கிக் கொண்டிருந்தார். சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பு ஒரு பெண்ணால் அவ்வாலயம் உருவாககப்பட்டதாகக் கர்ணபரம்பரைக் கதை ஒன்று கூறுகிறது.

அவ்வூரில் சிவகாமி என்றொரு பெண் இருந்தாள். அவளுக்கு முப்பது வயதாகியும் திருமணமாகவில்லை. அவளது பெற்றோர் அவளுக்கு எத்தனையோ திருமணங்கள் பேசியும் சரிப்படவில்லை. அந்த வேதனையில் மனமுடைந்த பெற்றோர் இறந்து விட்டனர். அனாதையான சிவகாமி கூலி வேலைகளைச் செய்து தனது வாழ்க்கையை நடத்தி வந்தாள். அவ்வூர் பண்ணையாரின் மகன் கோவிந்தன் மனைவியை இழந்து தனிமையில் துயருடன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அவன் சிவகாமியைத் கண்டு அவள் மீது காதல் கொண்டான். தான் சிவகாமியைத் திருமணம் செய்யப்போவதாக தனது பெற்றோரிடம் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வருடகாலமாக திருமணம் வேண்டாமெனக்கூறி துயருடன் வாழ்ந்து வந்த கோவிந்தன் திருமணம் செய்யச் சம்மதித்தது அவனது பெற்றோருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்த போதும் அனாதையும் கூலித்தொழில் புரிபவளுமான சிவகாமிக்கு தமது மகனைத் திருமணம் செய்து கொடுக்க அவர்கள் தயங்கினர். கோவிந்தன் விடாப்பிடியாக தான் திருமணம் செய்தால் சிவகாமியைத் தான் செய்வேன்; இல்லாவிட்டால் திருமணப் பேச்சே எடுக்க வேண்டாம் என்று கூறினான். இதனால் எதுவும் செய்யமுடியாத கோவிந்தனின் பெற்றோர் சோதிடரை நாடினர். சோதிடர் பல மணிநேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். பின்பு "இந்தத் திருமணம் யார் தடுத்தாலும் நடந்தே தீரும். ஏனெனில் இதற்குப் பின்பு பல விபரீதங்கள் நடக்கப் போகின்றன. அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அந்தப் பெண்ணின் ஜாதகப்படி அவள் ஒரு தெய்வம். நாட்டுக்கு நன்மை செய்ய வந்தவள். அவளின் உடலை எந்த ஒரு ஆடவனாலும் தொடமுடியாது. அதனால் தான் இவ்வளவு காலமும் திருமணமாகாமல் இருந்தாள். இப்பொழுது வேளை வந்துவிட்டது. திருமணத்தைப் பெரிதாகச் செய்யுங்கள்" என்றார்.

கோவிந்தனின் பெற்றோர் திருமணத்திற்கான ஆயத்தங்களைச் செய்தனர். திருமணம் வெகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமரிசையாக நடைபெற்றது. கோவிந்தன் சிவகாமியின் கழுத்தில் மங்கல நாணைக் கட்டினான். மணமக்கள் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அறைக்குள் புகும் வேளை கோவிந்தன் "சிவகாமி வயிற்றில் குழப்பமாக இருக்கிறது. வெளியே சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

வெளியே சென்ற கோவிந்தன் வெகு நேரமாகியும் திரும்பி வராததினால் உறவினர்கள் அவனைத் தேடி வெளியே சென்றனர். ஒரு அரசமரத்தின் கீழ் கோவிந்தன் விழுந்து கிடந்தான். வாயாலும் மூக்காலும் வெள்ளை நுரை தள்ளப்பட்டிருந்தது. திருமணத்திற்கு சோதிடம் பார்த்த சோதிடர் வந்து கோவிந்தனைப் பரிசோதித்து விட்டுச் சொன்னார் "கோவிந்தன் இறந்து விட்டான்"

ஊரவர் குழறினர், இனத்தவர் பெருங்குரலெடுத்து அழுதனர். கோவிந்தனின் பெற்றோர் மயங்கிச் சாய்ந்தனர். சிவகாமி கோவிந்தன் இறந்து கிடந்த அரசமரத்தின் கீழ் பதினைந்து தினங்கள் ஊணுறக்கமின்றி இருந்து இறந்தாள். ஊரவர்கள் அவளது உடலை அரசமரத்தின் கீழ் புதைத்துவிட்டு அதில் ஒரு சிறு கோயிலைக் கட்டினர். அக்கோயில் இன்றும் உள்ளது. அவ்வூர் மக்கள் இன்றும் தமது பிள்ளைகளுக்குத் திருமணமாகாவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கோயிலிற்கு வந்து தீர்த்தக்கரையில் மூழ்கி அந்த அரசமரத்தைச் சுற்றி வந்து நூல் கட்டுவார்கள். தமது பிள்ளையின் திருமணம் முடிந்ததும் வந்து நேர்த்தியைச் செய்து நூலை அவிழ்ப்பார்கள். பௌர்ணமி தினங்களில் அங்கு பொங்கிப் படைப்பார்கள். அவ் ஆலயத்திற்கு அர்ச்சகர் யாரும் இல்லை. விரும்பியோர் விரும்பிய நேரம் வந்து தமது குறைகளைச் சொல்லி நேர்த்தி வைத்துவிட்டுப் போவார்கள்.

நல்லைபுரத்தில் சரவணன் என்றொரு இளைஞன் இருந்தான். மிகவும் சாதுபோல் மக்களுக்குத் தோற்றமளிக்கும் அவன் பஞ்சமா பாதகங்கள் அனைத்தையும் திரைமறைவில் செய்து கொண்டிருந்தான். ஊரில் நாலைந்து நண்பர்கள் அவனுக்கு இருந்தனர். இரவானதும் எல்லோரும் ஒன்று கூடி களவெடுப்பார்கள். மது அருந்துவார்கள். அழகான பெண்களைக் கடத்திச் சென்று கற்பழித்துக் கொலை செய்வார்கள். இதனால் ஊர்மக்கள் கவலைப்படத் தொடங்கினர். ஊர்ப் பெரியவர் ஒருவர் ஒருநாள் சொன்னார் “தன்னுடைய கணவன் இறந்தமைக்காக பதினைந்து நாள் நோன்பிருந்து தெய்வமான சிவகாமியம்மனுக்கு வரும்பௌர்ணமி தினத்தன்று பொங்கல் வைத்து ஊரில் அநியாயங்கள் செய்வோரை கண்டுபிடித்து தண்டிக்கும்படி நேர்த்திக் கடன்வைப்போம்” என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி பௌர்ணமி தினத்தன்று ஊரில் உள்ள அனைவரும் சிவகாமி அம்மனின் ஆலயத்தில் கூடி பொங்கிப் படைத்து தமது வேதனைகளைக் கூறினர். அதே வேளை சரவணன் உருக்கொண்டு வேப்பிலையுடன் ஆடியபடி ஓடிவந்து ஆலயத்துள் புகுந்தான். "நான் தான் கோவிந்தன். ஆயிரம் வருடங்களுக்கு முன்பு பாம்பு கடித்து இறந்தனான். இவ்வளவு காலமும் இந்த ஊரில் அநீதிகள் நடைபெறவில்லை.இப்பொழுது எமது அயற்கிரா மங்களிலிருந்து இளைஞர்கள் வந்து கொள்ளையடிக் கிறார்கள். இதை விட்டு வைக்க முடியாது. நான் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து கொலை செய்வேன். இரவு முழுவதும் உங்களுக்காக நான் விழித்திருப்பேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். இந்தக் கிராமத்தைச் சூழ்ந்த துன்பத்தை நான் நீக்குவேன்" என்றான்.

மக்கள் எல்லோரும் அதை நம்பினர். கோவிந்தன் மறுபிறப்பெடுத்து வந்து விட்டதாக நினைத்தனர். இச்செய்தி அயல் கிராமங்கள் எங்கும் பரவியது. மக்கள் பெருந்தொகையாக வந்து சிவகாமியம்மனைத் தரிசித்தனர். சரவணன் அரசமரநிழலில் காவியுடை தரித்து உருத்திராட்ச மாலை அணிந்து நிஷ்டையில் இருந்தான். மக்கள் அவனது பாதங்களைத் தொட்டு வணங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் ஒன்று கழிந்தது. நல்லைபுரத்தில் தீய செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால் அயற்கிராமங்களில் கொள்ளைகளும், கொலைகளும், பெண்கடத்தல்களும் நடைபெற்றன.

நல்லைபுரத்து மக்கள் கோவிந்தன் தான் சரவணனுருவில் வந்து தம்மைக் காப்பதாக நினைத்தனர். அயற்கிராம மக்கள் தம்மையும் நல்லைபுரத்து மக்களைக் காப்பாற்றுவது போல் காப்பாற்றுமாறு சிவகாமி அம்மனையும் கோவிந்தன் உருவிலிருக்கும் சரவணனையும் வேண்டினர்.

ஒருநாள் விடியற்காலை நல்லைபுரத்தின் ஒதுக்குப்புறமான இடத்தில் ஓர் இளைஞன் குற்றுயிராய் கிடக்கிறான் என்று மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் சொன்னான். நல்லைபுரத்தில் வசிக்கும் லம்போதரன் என்ற இளைஞன் மாடுமேய்க்கும் சிறுவனுடன் அவ்விடத்திற்குச் சென்றான். குற்றுயிராகக் கிடந்த அந்த இளைஞன் வேதனையால் முனகியபடி சொன்னான், "சரவணன் கொடியவன் அவன் தனது நண்பர்களுடன் சேர்ந்து ஊரை ஏமாற்றுகிறான். முன்பு உங்கள் கிராமத்தை கொள்ளை அடித்தான். இப்பொழுது அயற் கிராமங்களை கொள்ளையடிக்கிறான். பெண்களைக் கடத்தி கற்பழித்துக் கொலை செய்வது அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில். எனது தங்கையையும் கொலை செய்துவிட்டான். கேட்கப் போன என்னை பலமாக அடித்துவிட்டான்" என்று கூறிவிட்டு இறந்தான்.

அவன் இறந்த பின்பு அவ்விடத்திற்கு வந்த சரவணன் உருக்கொண்டவன் போல் ஆடினான். பின்பு "இவன் எழுவூரைச் சேர்ந்த கதிரேசன். இவனின் தலைமையில் பதினேழு பாவிகள் இருக்கிறார்கள். பத்து நாட்களில் எல்லோரையும் நான் அழித்துவிடுவேன்" என்று கர்ச்சித்தான் சரவணன்.

மக்கள் பலமாக "அரோ ஹரா" என்றனர். சரவணனின் வீரத்தைப் பாராட்டினர். ஆனால் லம்போதரன் மட்டும் என்ன செய்யலாமென யோசித்தான்.

அன்று இரவு லம்போதரன் தன்னுடைய நண்பர்கள் மூன்றுபேரை அழைத்துக்கொண்டு எழுவூருக்குச் சென்று அவ்வூரில் கிராமத்தலைவரை சந்தித்து முழு விபரத்தையும் சொன்னான். "ஐயா சரவணன் மிகவும் பொல்லாதவன் அவனது நடத்தையில் எமக்கு சந்தேகம் இருக்கிறது. நாம் சொன்னால் ஊரவர்கள் நம்பமாட்டார்கள். அதோடு நமது திட்டத்தைச் சரவணன் அறிந்தால் தன்னை மாற்றிக் கொள்வான். திட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றி எம்மீது பழி சுமத்தி விடுவான். சரவணன் கூறுவதை ஆராயாது நம்புவார்கள். பலர் எமது கிராமத்தில் இருக்கின்றனர்.

"தபஸ்ஸி என்ற போர்வையைப் போர்த்தியிருப்பவர்கள் எல்லோரையும் இலகுவில் நம்பக் கூடாது. புண்ணிய தீர்த்தங்களில் அவர்களில் பலர் தொண்டையும் பல்லும் உடையவர்களாக இருப்பதை நாம் காண்கிறோம். நாம் திட்டமிட்டு செயலில் இறங்கினால் சரவணனை ஒழிக்கலாம்" என்றான்.

அன்றிரவு அவ்வூர் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு விழித்திருந்து காவற் கடமையில் ஈடுபட்டனர். நள்ளிரவில் ஐவரைக் கொண்ட குழு ஒன்று கிராமத்துள் நுழைவதைக் கண்டனர். எல்லோருமாகச் சேர்த்து ஐவரையும் பிடித்து மரங்களில் கட்டிவைத்துவிட்டு கம்புகளால் அடித்தனர்.

சரவணன் தானும் தனது நண்பர்களும் செய்த குற்றங்கள் யாவற்றையும் ஒப்புக் கொண்டான். விடிந்ததும் கிராமமக்கள் அவர்களை ஊர்த்தலைவரிடம் ஒப்படைத்தனர். சிறிது நேரத்தில் சரவணன் இறந்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அரவ மாட்டேல்

நல்லூர் மலைப்பிரதேசத்தில் உள்ள அடர்ந்த காட்டின் எல்லையில் உள்ள ஒரு சிறு கிராமமாகும். அங்கு பெரும்பான்மையான மக்கள் விவசாயம் செய்து வந்தனர். காட்டோரமாக அக்கிராமம் இருந்ததால் காட்டில் பழுக்கும் நாவற்பழம், பாலைப்பழம், விளாம்பழம், காட்டு முந்திரிகைப்பழங்களைப் பறித்து வந்து நல்லூர் மக்கள் அயலில் உள்ள கிராமங்களில் விற்பனை செய்வார்கள். அதன் மூலம் பெருந்தொகைப் பணத்தை பெறமுடியாவிட்டாலும் அன்றைய தேவைகளுக்குப் போதுமானதாக இருந்தது. இதைவிடக் காட்டில் உள்ள பெரிய மரங்களின் பொந்துகளில் இருந்து பெறப்படும் தேனையும், மிருகங்களின் இறைச்சியையும் மக்கள் அயற் கிராமங்களில் கொண்டு சென்று விற்பனை செய்வார்கள். பொதுவாக அவ்வூர் மக்களுக்கு வருடம் பூராவும் அக்காடு உணவளித்துக் கொண்டிருந்தது.

தில்லையம்பலம் நல்லூரில் விவசாயம் செய்யும் ஒரு குடியானவன். தன்னிடம் உள்ள சிறிதளவு நிலத்தில் காய்கறிகளையும், நெல்லையும் பயிரிடுவான். வருடம் பூராவும் அவனது தோட்டத்தில் அவனது குடும்பத்திற்குத் தேவையான காய்கறிகள் கிடைக்கும். நெல்லும் அவனது தேவைக்குப் போதுமானதாக இருந்தது. இருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லையம்பலம் தினமும் காட்டுக்குச் சென்று பழங்களைச் சேகரிப்பான். தேன் எடுப்பான். காட்டில் வாழும் முயல்கள் உடும்புகள், காட்டுக்கோழிகள் முதலியவற்றை வேட்டையாடி வந்து அயலில் உள்ள கிராமங்களில் விற்பனை செய்வான்.

தில்லையம்பலம் திருமணமாகி பத்து வருடங்கள் கழிந்தும் அவனுக்குப் பிள்ளைகள் பிறக்கவில்லை. இது அவனைவிட அவனது மனைவி சரஸ்வதிக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. சரஸ்வதி நல்லூரில் வாழும் சின்னப்பா பிள்ளையின் மகள். ஊரில் உள்ள மற்றையோரைவிட வசதியானவள். சின்னப்பா பிள்ளைக்கு சரஸ்வதி ஒரே மகள். இதனால் அவர் சரஸ்வதியின் மீது அளவுக்கதிகமான அன்பை வைத்திருந்தார். அதனால் தனது வருமானத்தின் ஒரு பகுதியை தனது மகளுக்குக் கொடுத்து வந்தார். இதனால் சரஸ்வதி மற்றைய பெண்களைவிட ஆடம்பரமாக வாழ்ந்து வந்தாள். விலை உயர்ந்த சேலைகளை அவள் அணிந்திருப்பாள். இது அவ்வூர்ப் பெண்களுக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவளை மலடி என்று பழித்தனர். "நாலைந்து பிள்ளைகள் இருந்தால் இப்படிச் சீவிச் சிங்காரிக்க முடியுமா?" என்று கிண்டல் செய்தனர். இது சரஸ்வதிக்கு மிகுந்த கவலையைக் கொடுத்தது. அவள் அவ்வூர்ப் பிள்ளையார் கோயிலில் நோன்பிருந்தாள். அப்படி தொடர்ந்து ஐந்து வருடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பிருந்ததன் பயனாக அவளுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு அவள் ஐங்கரன் என்ற பிள்ளையாரின் நாமத்தைச் சூட்டி அன்புடன் வளர்த்து வந்தாள்.

நல்லூரின் அயல் கிராமமான சேனையூரியில் இரத்தினம் என்றொரு பாம்பாட்டி வசித்து வந்தான். அவனிடம் ஐந்து நாகபாம்புகள் இருந்தன. அவற்றை அவன் கூடையில் வைத்து கிராமத்தில் உள்ள வீடுகளில் ஆட்டி தனது சீவியத்தை நடத்தி வந்தான். கிராமங்களில் உள்ள மக்கள் பாம்பு ஆடுவதை மகிழ்வுடன் கண்டுகளித்தனர். சந்தைகள், பிரதான வீதியில் உள்ள சந்திகள், கோயில் திருவிழாக்கள் முதலியவற்றில் இரத்தினம் மகுடி ஊத பாம்புகள் ஆடும். சிறுவர்களும் பெரியவர்களும் பாம்பு ஆடுவதைப் பார்த்து ரசிப்பார்கள். தம்மிடம் உள்ள சில்லறைக் காசுகளை பாம்பாட்டியின் பெட்டியில் போடுவார்கள். இதனால் இரத்தினத்திற்கு நல்ல வருமானம் வரும். இதை விட பணக்காரர்கள் தமது வீடுகளிலும் பாம்பாட்டத்தை ஒழுங்கு செய்து அதன் நடனத்தை கண்டு களிப்பார்கள்.

தில்லையம்பலத்திற்கு பாம்பு ஆடுவதைக் காண ஆசை. இரத்தினம் பாம்பு ஆட்டும் இடங்களுக்கெல்லாம் சென்று பாம்பாட்டத்தைப் பார்ப்பான். தானும் பாம்பைப் பிடித்து பழக்கி ஆட்டினால் என்ன என்று அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பான். தனது விருப்பத்தை சரஸ்வதியிடம் பல தடவைகள் சொல்லிய போதும் அவள் அதற்கு ஒத்துக்கொள்ள மறுத்துவிட்டாள். எனினும் தில்லையம்பலத்தின் மனதில் தான் ஒரு பாம்பைப் பிடித்து வந்து நடனம் பழக்கி ஆட்ட வேண்டுமென்ற ஆசை இருந்தது. அதனால் அவன் இரத்தினத்துடன் உறவு வைத்தான். இரத்தினமும் தனக்கு ஒரு உதவியாளன் இருந்தால் வருமானம் கூடுதலாக வருமென நினைத்து தில்லையம்பலத்தை தனது உதவியாளனாக வைத்துக் கொண்டான்.

தில்லையம்பலம் இரத்தினத்துடன் சேர்ந்து அரவமாட்டுவது சரஸ்வதிக்கு பிடிப்பதில்லை. அதனால் அவள் சொன்னாள். நீங்கள் இரத்தினத்துடன் சேர்ந்து பாம்பாட்டுவது எனக்குப் பிடிக்கவில்லை. பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பார்கள். பாம்பு ஒரு கொடிய பிராணி. அதன் பற்களில் மட்டுமல்ல; அதன் செதில்களிலும் விஷம் உண்டு. அதன் செதில்பட்டாலும் மனிதனுக்கு கேடு உண்டாகும். பெரியவர்கள் பாம்பாட்டக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அத்துடன் எமது சமயமோ நாக பாம்பை அடித்துக் கொன்றாலோ, அதற்கு துன்பஞ் செய்தாலோ, செய்பவனின் பரம்பரைக்கு நாகதோசம் பிடிக்கும் என்று சொல்கிறது. நாகதோசம் பிடித்தால் எந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனாலும் இன்பமாக வாழமுடியாது. துன்பங்கள், துயரங்கள் வாழ்க்கையில் வருவதோடு சந்ததியும் தழைக்காது என்று கூறுகிறார்கள். எனவே தயவு செய்து இரத்தினத்துடன் சேர்வதை விட்டு விடுங்கள்" என்று மன்றாடினாள்.

தில்லையம்பலம் அவளது சொல்லைக் கேட்கவில்லை. இரத்தினத்துடன் பாம்பு பிடிப்பதற்காக காட்டுக்குச் சென்றான். இரத்தினம் பாம்பு பிடிப்பதில் வல்லவன், காட்டில் பெரியதொரு நாகபாம்பைப் பிடித்துக் கூடையில் அடைத்துக் கொண்டு தில்லையம்பலத்தின் வீட்டுக்குச் சென்றான். அவர்கள் பிடித்த நாக பாம்பு மிகவும் பெரியது. கூட்டுக்குள் இருந்து பயங்கரமாகச் சீறியது. கூட்டை உலுப்பியது. இரத்தினம் பாம்பை கூட்டுடன் வைத்துவிட்டு கள்ளருந்தச் சென்று விட்டான். பாம்பு ஆடி முடிந்ததும் இரத்தினம் பாம்புகளுக்கு முட்டை, தவளை, எலி, போன்றவற்றை கூட்டில் விட்டுவிட்டு தினமும் கள்ளருந்துவது வழக்கம். அன்று தில்லையம்பலத்தின் வீட்டில் பாம்பைக் கூடையுடன் வைத்துவிட்டு சென்றான். மாலை வந்து பார்த்தபோது கூடை வெறுமையாக இருந்தது பாம்பை காணவில்லை இரத்தினமும் தில்லையம்பலமும் பாம்பை எல்லா இடமும் தேடினர். சரஸ்வதி பயத்துடனும் பீதியுடனும் வீட்டினுள்ளே சென்று பார்த்தாள். வீட்டினுள் கட்டியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டிலின் மீது பாம்பு படுத்திருந்தது. சரஸ்வதியைக் கண்டதும் தொட்டிலில் இருந்து சீறியபடி படமெடுத்து ஆடியது தொட்டிலின் உள்ளே ஐங்கரன் படுத்திருந்து தனது கைகளையும் கால்களையும் ஆட்டிக் கொண்டிருந்தான். சரஸ்வதிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை "பிள்ளையாரே எனது பிள்ளையைக் காப்பாற்று" என்று வேண்டியபடி வெளியே ஓடிவந்தாள் இரத்தினம் மதுவுண்ட மயக்கத்தில் தள்ளாடியபடி வந்தான். அவனின் பின்னால் தில்லையம்பலம் வந்தான்.

"ஐயோ, பாம்பு தொட்டிலில் படமெடுத்து ஆடுது பிள்ளை தொட்டிலுக்குள் படுத்திருக்கு" என்றாள்.

தில்லையம்பலம் பயந்து போனான். சுமார் பத்தடி நீளமான நாகபாம்பு. நினைக்கவே அவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. தடுமாறியபடி அப்பாம்பை அடிப்பதற்கு தடியொன்றைத் தேடினான்.

"ஐயோ நான் தவமிருந்து பெற்ற பிள்ளை, பிள்ளையாரே என்னுடைய பிள்ளையைக் காப்பாற்று" என்று அழுதாள் சரஸ்வதி

"அழாதை சரசு.. இப்பிடி ஆயிரம் பாம்புகளை நான் கண்டனான். பயப்பிடாதை பத்து நிமிடத்தில் பிடித்துத்தாறன்" என்றவாறு வீட்டுள்ளே நுழைந்தான் இரத்தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியறிந்த அவ்வூர் மக்கள் தில்லையம்பலத்தின் வீட்டினுள் கூடினர். உள்ளே சென்ற இரத்தினம் பாம்பை பிடித்துக்கொண்டு வெளியே வந்தான். அவனது வாயில் இருந்து நுரை தள்ளியது. பாம்பு அவனது கையைச் சுற்றியிருந்தது. இரத்தினம் கையைப் பலமுறை உதறியும் பாம்பு கையை விட்டு விழவில்லை.

சரஸ்வதி வீட்டினுள்ளே ஓடிச்சென்றாள். தொட்டிலுள் ஐங்கரன் கைகளையும் கால்களையும் அசைத்து சரஸ்வதியைப் பார்த்துச் சிரித்தான். "பிள்ளையாரே..." என்று மனமுருக அழைத்தவாறு சரஸ்வதி மகனைத் தூக்கி முத்தமிட்டாள்.

கூடிநின்ற மக்கள் பாம்பை அடித்துக் கொன்றுவிட்டு இரத்தினத்தை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். இரத்தினம் இரத்தம் இரத்தமாக சத்தி எடுத்தான். ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியில் இரத்தினம் இறந்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. இலவும்பஞ்சிற்றுயில்

கோவை நகரில் ஆறுமுகநாதன் என்றொரு ஆசிரியர் இருந்தார். அவர் கல்வியறிவு மிக்கவர். மாணவரிடத்தில் பேரன்பு பூண்டவர். பாடசாலை விட்டபின்பு தரம் ஐந்து மாணவர்களுக்காக விஷேட வகுப்புக்கள் வைப்பார். அதற்காக கட்டணம் எதுவும் அறவிட மாட்டார். அந்த ஊரில் பல பாடசாலைகள் இருந்தும், அவர் கற்பிக்கும் பாடசாலையில் இருந்துதான் அதிகமான பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர்.

புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வந்த பின்பு அதிபரும் பெற்றோருமாகச் சேர்ந்து வருடா வருடம் அவரைப் பாராட்டுவார்கள். அவருக்கு பாடசாலையில் மட்டுமன்றி அயல் ஊர்களிலும் நல்ல மதிப்பு உண்டு. ஆறுமுகநாதன் ஆசிரியரைப் போல் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு ஆசிரியர் இருந்தால் போதும் அவ்வூரில் கல்வி சிறக்கும் என்று மக்கள் பேசிக் கொள்வார்கள்.

ஆறுமுகநாதன் ஆசிரியருக்கு இரண்டு ஆண் குழந்தைகள். இரண்டும் அவரது பாடசாலையில் கல்விகற்று புலமைப்பரீசில் பரீட்சையில் சித்தியடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டணத்தில் உள்ள தேசிய பாடசாலையில் கல்விகற்கிறார்கள். சகல வசதிகளோடு அவர் வாழ்ந்த போதிலும் அவருக்கு ஒரு பெண்குழந்தை இல்லாதது மனவருத்தத்தைக் கொடுத்தது.

பாடசாலை விட்டதும் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பு நடாத்திவிட்டு ஐந்து மணிக்கு பின்தான் வீட்டுக்கு வருவார். அவரின் மனைவி ஆரணி, கணவனின் மேல் அதீத அன்பு உள்ளவள். அவர் பாடசாலையால் வந்ததும் ஒரு கோப்பையில் பால் கொடுப்பாள். ஆறுமுகநாதன் ஆசிரியரிடம் ஒரு மாடும் இரு ஆடுகளும் ஒரு நாயும் உண்டு. ஆசிரியர் அவற்றைத் தன்னுடைய பிள்ளைகளாகவே நினைப்பார். பாடசாலை விட்டு வந்ததும் தோட்டத்திற்குச் சென்று ஆடுகளுக்கும் மாட்டிற்கும் புல் செருக்கி வந்து போடுவார். அவரின் வீட்டிற்கு சிறிது தூரத்திலேயே தோட்டம் இருக்கிறது. அவரது வளர்ப்பு நாயான வீமன் எந்நேரமும் அவரின் பின்னாலேயே திரியும். காலையில் அவர் பாடசாலைக்குப் புறப்பட்டால் அது அவரின் பின்னால் அவரின் வீட்டிற்கு அருகில் உள்ள சந்திவரை செல்லும். பின் ஒரு முறை குரைத்துவிட்டு திரும்பி வீட்டிற்கு வந்துவிடும். மாலை வேளைகளில் சரியாக ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு அந்தச் சந்திக்குச் சென்று ஆறுமுகநாதனின் வரவுக்காக காத்திருக்கும். அவர் வரமுன்பாக அது விரைவாக வீட்டுக்கு வந்துவிடும். அது வந்தவுடன் ஆரணி பாலுடன் வெளியே வருவாள். ஆசிரியர் வீட்டிற்கு வந்து நாற்காலியில் அமர்ந்தவுடன் வீமன் அவரின் காலடியில் படுத்திருந்து அவரது வேட்டியை தனது பற்களால் கௌவி இழுக்கும். இது நாள் தோறும் அங்கு நிகழும்.

அன்று பாடசாலையால் வந்த ஆறுமுகநாதன் மனைவி கொடுத்த பாலைக் குடித்துவிட்டு புல் சேகரிப்பதற்காக தோட்டத்திற்குச் சென்றார். அவரின் பின்னால் வீமன் சென்றது. இரண்டு மூன்று நாட்களாக தொடர்ந்து அங்கு பெருமழை பெய்ததனால் நிலம் சேறும் சகதியுமாக இருந்தது. அவரால் போதியளவு புல் சேகரிக்க முடியவில்லை. அதனால் குழைவெட்டிப் போடலாம் என நினைத்தார்.

அவரது தோட்டக்கிணற்றின் மிதிக்கு அருகே கிணற்றுள் பெரியதொரு அரசமரம் முளைத்திருந்தது. அதை வெட்டித் துப்பரவு செய்யவேண்டுமென ஆறுமுகநாதன் பல நாட்களாக நினைத்தும் நேரமில்லாமையால் அவரால் அதைச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. அன்று அவற்றை வெட்ட வேண்டும் என்று நினைத்தார். கிணற்றடிக்குச் சென்ற ஆறுமுகநாதன் கிணற்றிற்கு மேலாக வளர்ந்திருந்த கிளைகளை வெட்டினார். பெரியதொரு கட்டு குழை சேர்ந்துவிட்டது. அதைக் கொண்டு சென்று வீட்டிலுள்ள மாட்டிற்கும் ஆடுகளுக்கும் போட்டார். பின்பு மிகுதியாக உள்ளவற்றையும் வெட்டித் துப்பரவு செய்ய மீண்டும் கிணற்றடிக்குச் சென்றார். தோட்டக் கிணறு மிகவும் ஆழமானது. சுமார் நாற்பது அடி ஆழமானது. அதனுள் பத்தடிக்கு மேல் நீர் இருந்தது. தொடர்ந்து மூன்று நாட்களாக மழை பெய்து வந்ததால் நீர்மட்டம் சற்று உயர்ந்திருந்தது.

ஆறுமுகநாதன் கிணற்று மிதியில் காலை வைத்தபோது வீமன் குரைத்தபடி அவரது சாரத்தை வாயால் கௌவி இழுத்தது. ஆறுமுகநாதன் வலது கையில் கத்திவைத்திருந்ததால் இடது கையால் அதன் கன்னத்தில் லேசாக அடித்தார். அது சாரத்தை விடவில்லை. ஆறுமுகநாதன் கத்தியை வைத்துவிட்டு வலது கையால் ஓங்கி அடித்தார். வீமன் சாரத்தை விட்டு விட்டு குலைத்தது. ஆறுமுகநாதன் மிதியில் ஏறினார். பின்பு கிணற்றிற்கு குறுக்காக உள்ள இரும்புப்பைப்பில் வலது காலை வைத்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசமரத்தின் கிளை ஒன்றை வெட்டினார். அந்தக்கிணற்றில் மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்கள் இருந்தன. இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பாக அவை பொருத்தப்பட்டன. அதனால் குறுக்கே இருந்த இரும்புப் பைப்பில் வெடிப்பிருந்ததை ஆறுமுகநாதன் கவனிக்கவில்லை. சற்று உயரமாக இருந்த கிளையை வெட்டுவதற்காக காலை உயர்த்தினார் குறுக்காக இரும்புக்குழாய் பட்டென்று முறிந்தது. ஆறுமுகநாதன் சமநிலைதவறி கிணற்றுக்குள் வீழ்ந்தார். அவருக்கு நீந்தத் தெரியாது, நீருள் மூழ்கினார். அவரது மனம் பிள்ளையாரை வேண்டியது. அவர் பிள்ளையார் மீது அதிக பற்றுள்ளவர். பிள்ளையாரைக் குறித்துப் பிடிக்கும் விரதங்களை நெறிமுறை தவறாது பிடிப்பவர். இரண்டு முறை நீருக்குள் அமிழ்ந்து மேலே வந்தவர் கைக்கெட்டிய நீர் இறைக்கும் இயந்திரத்தின் குழாயைப் பற்றிப் பிடித்துக்கொண்டார்.

கிணற்றுள் ஆறுமுகநாதன் விழுந்ததும் வீமன் உசாரானது. கிணற்றைச் சுற்றிச் சுற்றி பலமாகக் குரைத்தது. உள்ளே இருந்த ஆறுமுகநாதன் வீமனையும் மனைவியையும் பலமாக அழைத்தார். வீமன் கிணற்றைப் பார்த்தவண்ணம் ஓயாமல் குரைத்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைமணிநேரம் கடந்தும் கிணற்றடிப் பக்கம் யாரும் வரவில்லை. இருள் சூழ்ந்து விட்டது. கிணற்றுள் இருந்து பலத்த குரல் எழுப்பியமையாலும், நனைந்தமையாலும் ஆறுமுகநாதன் களைத்துவிட்டார். இன்னும் சிறிதுநேரத்துள் யாராவது வந்து தன்னைக் காப்பாற்றாவிட்டால் மரணம் நிச்சயம் என உணர்ந்தார். எனினும் நம்பிக்கையுடன் பலமாகக் கத்தினார்.

வீமன் என்ன நினைத்ததோ தெரியவில்லை வீட்டிற்குச் சென்று ஆரணியைப் பார்த்துக் குரைத்துவிட்டு தோட்டப்பக்கம் ஓடியது. மீண்டும் மீண்டும் குரைப்பதும் ஓடுவதுமாக இருந்தது. முதலில் அதன் செயலைக் கவனியாது இருந்த ஆரணி மீண்டும் மீண்டும் அது அப்படிச் செய்வதால் அதன் நடத்தையில் மாற்றம் இருப்பதை உணர்ந்து அதன் பின்னால் சென்றாள். வீமன் விரைவில் கிணற்றடியை நோக்கி ஓடியது. அரைவாசித் தூரத்தில் ஆரணி செல்லும்போது யாரோ அலறும் சத்தம் கேட்டது. வீமன் ஓடிச்சென்று கிணற்றைப் பார்த்துக் குரைத்தது. கிணற்றுள் இருந்து ஆறுமுகநாதன் பலமாகக் கத்திக்கொண்டிருந்தார்.

ஆரணி தனது பிள்ளைகளைக் கொண்டு அயலவர்களுக்கு அறிவித்தாள். அவர்கள் பெரியதொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்காலியைக் கயிற்றில் கட்டி, ஆறுமுகநாதனை அதிலிருத்தி மேலே கொண்டு வந்தனர். எல்லோரும் வீமனின் புத்திசாதுரியத்தைப் பாராட்டினர்.

கிணற்றில் இருந்து தூக்கப்பட்ட ஆறுமுகநாதன் நடப்பதற்கு சிரமப்பட்டார். அவருக்கு இடுப்புப் பகுதியில் நோ இருந்தது. அந்த நோவுக்கு ஆறுமாத காலம் வைத்தியம் செய்த போதும் குணமேற்படவில்லை. பாடசாலைக்குச் செல்லவே அவருக்கு கஷ்டமாக இருந்தது.

அவரது வீட்டிற்கருகில் ஒரு சித்த வைத்தியர் இருந்தார். அவர் ஒருநாள் ஆறுமுகநாதனைக் பார்க்க வந்தார். அவரைப் பார்த்துவிட்டுச் சொன்னார். எமது முன்னோரும் முனிவர்களும், ரிஷிகளும் மூலிகைகளையே உணவாக உட்கொண்டனர். இப்பொழுது ஆங்கில வைத்திய முறைகளைத்தான் எல்லோரும் பின்பற்றுகிறார்கள். குளிகை களையும்,ஊசிமருந்துகளையும் உட்கொள் கின்றனர். இவற்றால் பெரும் பயனைக் கண்டு கொள்ள முடியாது. நம் முன்னோர்கள் தலவலிமையும், மனவலிமையும், உடல்வலிமையும் பெற இலை குழைகளையும் கிழங்கு வகைகளையும்தான் உண்டு வந்தனர். அவையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் ஏற்படாமல் தடுக்கும் மருந்து மூலிகைகள். சில குழைவகைகளை உண்டால் பாம்பு கடித்தால் கூட விஷம் ஏறாது. நீர் எல்லா வகையான மருந்து வகைகளையும் செய்துவிட்டீர். ஆனால் பலன் இல்லை இப்பொழுது நான் சொல்வது போல் செய்து பாரும். நல்ல இலவம் பஞ்சு எடுத்து மெத்தை செய்து அதில் படுத்துறங்கும். இலவம்பஞ்சு உடலுக்கு மெதுமையைக் கொடுத்து வலியை நீக்கும் பண்புள்ளது. அத்துடன் பித்தம், கபம், வாயு முதலியவற்றையும் நீக்கும். வாத நோயைக் கூட இலவம்பஞ்சு நீக்கும் தன்மை உடையது என்று கூறிவிட்டுச் சென்றார். ஆறுமுகநாதன் அன்றே ஒரு இலவம்பஞ்சு மெத்தை செய்து அதில் உறங்கி வரலானார்.

ஆறுமாதம் கழிந்ததும் அவரது உடலில் உள்ள வலியாவும் நீங்கிவிட்டது. முன்னையை விட இளமையும் சுறுசுறுப்பும் ஏற்பட்டது. மேலும் சிலமாதங்கள் கழிந்தன. அவருக்கு அழகான பெண் குழந்தையொன்று பிறந்தது. ஆறுமுகநாதனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. வஞ்சகம் பேசேல்

ஜெயபுரத்தில் சிவஞானம் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் அவ்வூரில் உள்ள பெரியதொரு பாடசாலையில் அதிபராக இருந்தார். அவ்வூரில் பத்துப்பாடசாலைகள் இருந்தன. அப்பத்துப் பாடசாலைகளிலும் சிவஞானத்தின் பாடசாலைதான் மிகவும் பெரியது. அதனால் மிகுந்த கர்வமும் தலைக்கனமும் அவருக்கு இருந்தது. ஏனைய பாடசாலை அதிபர்கள் தனது சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும்; தான் சொல்வதெல்லாவற்றையும் வேதவாக்காக ஏற்றுக்கொள்ள வேண்டும்; தன்னைக் கேட்டுத்தான் மற்றைய பாடசாலைகளில் கொண்டாட்டங்கள் நடைபெற வேண்டும் என்று நினைப்பவர். தனது பாடசாலையில் விழாக்களைக் பெரிதாகக் கொண்டாடுவார். பெரிய பெரிய பிரமுகர்களை அழைத்துக் கௌரவிப்பார். அதனால் உயர்ந்த பதவியில் இருப்பவர்கள் மத்தியில் அவரது நாமம் புகழுடன் விளங்கியது. இதனால் பல அடாவடித்தனங்களிலும் அவர் ஈடுபடுவார். சிறிய பாடசாலை அதிபர்களையும் ஆசிரியர்களையும் அச்சுறுத்துவது, தனது சொல்லைக் கேளாதவர்களைப் பழிவாங்குவது போன்றன அவரது செயல்கள். அவருக்குப் பயந்து பல பாடசாலை அதிபர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களும் அவர் சொற்படி நடந்தனர். இரண்டு பாடசாலை அதிபர்கள் மட்டும் அவரது சொல் எதனையும் கேட்பதில்லை. அதில் ஒருவர் ஞானலிங்கம்.

ஞானலிங்கம் மிகவும் நல்லவர். இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றறிந்தவர். அறிவாளி, இவற்றை விட மனத்திடம் மிகுந்தவர், தனது பாடசாலையை நல்ல முறையில் நிர்வகித்து வந்தார். அவர் பொறுப்பேற்கும் போது நூறு மாணவர்களுடன் மிகவும் சிறியதொரு பாடசாலையாக அப்பாடசாலை இருந்தது. அவர் பொறுப்பேற்ற சில வருடங்களில் அப்பாடசாலை துரிதகதியில் வளர்ந்து அந்த நகரில் பிரபலமான பாடசாலையாகி விட்டது. இப்பொழுது ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் அங்கு கல்வி பயில்கின்றனர்.

ஞானலிங்கத்தின் பாடசாலை கல்வியில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கியது. முதலில் ஜெயபுரத்தில் பிரபல்யமாகிய அப்பாடசாலை நாளடைவில் அந்த மாவட்டத்திலேயே சிறந்த பாடசாலையாகத் திகழ்ந்தது. ஜெயபுரத்துக்கு அருகில் உள்ள கிராமங்களில் இருந்தும் பட்டணத்திலிருந்தும் பெருந்தொகையான மாணவர்கள் அங்குவந்து கல்வி கற்கத் தொடங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சிவஞானத்திற்கு பெரும் அவமானமாக இருந்தது. எப்படியும் வஞ்சகம்செய்து ஞானலிங்கத்தை அப்பாடசாலையிலிருந்து நீக்குவதற்கு முயற்சித்தார். ஊரிலுள்ள பிரமுகர்களை அழைத்து; "ஞானலிங்கம் ஊரிலுள்ள பிள்ளைகளைச் சேராமல் பணத்திற்கு ஆசைப்பட்டு வேறு கிராமங்களில் உள்ள பிள்ளைகளைச் சேர்க்கிறார். தற்பொழுது ஊரிலுள்ள பணக்காரப் பிள்ளைகள் தான் அப்பாடசாலையில் சேர்க்கப்படுகின்றனர். அப்படியாயின் ஏழைகளின் கதி என்ன..?" என்று கேட்டார்.

சிவஞானம் தான் ஊரிலுள்ள பெரிய அதிபர்; கற்றவர்; கற்றல் சம்மந்தமான ஆலோசனைகளை கூறுபவர்; மேதை என்று நினைத்திருந்த ஊர்ப்பிரமுகர்கள் எல்லோரும் சேர்ந்து, ஊரிலுள்ள மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து பெரியதொரு கூட்டம் வைத்தனர். அதற்கு சிவஞானம் தலமை தாங்கினார்.

ஊரில் பெரும் பிரமுகரான விநாயகரத்தினம் உரையாற்றினார். "அன்பான மக்களே, எமது ஊர்ப் பாடசாலையை ஞானலிங்கம் கெடுக்கிறார். அந்தப்பாடசாலை இன்று மாவட்டத்தில் முன்னணியில் இருப்பதற்குக் காரணம் ஆசிரியர்களின் அயராத முயற்சியே தவிர ஞானலிங்கத்தின் கெட்டித்தனமல்ல. ஆசிரியர்கள் கடமையுணர்வுடன் வேலை செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆசிரியர்களும் ஊரவர்கள்; ஊர்ப்பற்றுடன் கடமையாற்றுகிறார்கள். அங்குள்ள சில ஆசிரியர்களை விசாரித்துப் பார்த்தால் தான் தெரியும் ஞானலிங்கத்தின் அடாவடித் தனங்கள் பற்றி. இப்பொழுது காசுக்காக எமது பிள்ளைகளை விட்டுவிட்டு வேற்றூர் பிள்ளைகளைச் சேர்க்கிறார். இது நியாயமா?" ஆவேசமாகக் கேட்டார் விநாயகரத்தினம்.

கூட்டத்தில் இருந்த மயில்வாகனம் என்ற ஓய்வுபெற்ற அதிபர் எழுந்து சொன்னார். "பத்து வருடங்களுக்கு முன்பு மிகப் பெரியபாடசாலையாக இருந்த சிவஞானத்தின் பாடசாலை இன்று சிறிய பாடசாலையாகிவிட்டது. இது ஏனென்று உங்களுக்குத் தெரியாது. சிவஞானம் கல்வியில் கருத்தைச் செலுத்தாமல் பிற விடயங்களில் தமது கவனத்தைச் செலுத்தியமையால் மாணவர்கள் அப்பாடசாலையை விட்டு வெளியேறி விட்டனர். ஊர்ப்பிரமுகர்களை தனது செல்வாக்கைப் பயன்படுத்தி தன்பக்கம் வைத்திருக்கும் சிவஞானம் நல்லமுறையில் கல்விப் பணியாற்றியிருந்தால் அப்பாடசாலையின் கல்வித்தரம் உயர்ந்திருக்கும் ஞானலிங்கத்தின் பாடசாலையில் இப்போது கற்பிக்கும் பல ஆசிரியர்களை கற்பிக்கத் தெரியாதவர்கள் என்று கூறி சிவஞானம் இடமாற்றம் செய்தார். இப்பொழுது என்னவென்றால் அவ்வா சிரியர்கள் திறமைசாலிகளாம். எப்படி இருக்கிறது கதை?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமி என்பவர் ஆத்திரத்துடன் எழுந்தார். "இவ்வூர்ப் பிள்ளைகளைச் சேர்க்கவில்லை என்கிறீர்கள். அவ்வாறு சேர்க்காதவர்களின் பெயர்ப்பட்டியலைத் தாருங்கள். ஒருவனது நற்செயல்களைப் பாராட்டா விட்டாலும் களங்கங் கற்பிக்க முயலக் கூடாது. சிவஞானம் ஒழுங்காகக் கற்பித்தால் மாணவர் தொகை கூடுமே தவிர குறையாது. ஊர்ப்பிரமுகர்கள் என்று இருக்கும் நீங்கள் நீதிநியாயமான முறையில் நடக்க வேண்டும். சிவஞானம் கெட்டுக் குட்டிச்சுவரானதற்கு ஊர்ப்பிரமுகர்களான நீங்களும் ஒரு காரணம் என்பதை மறந்துவிடாதீர்கள். நல்லது செய்பவனைப் பாராட்டுங்கள்; உற்சாகப் படுத்துங்கள்; துணையாக நில்லுங்கள். அதனால் உங்களது குடியும் உயரும். வேலை செய்பவனின் மனதும் மகிழும், அதை விட்டு விட்டு தீமை செய்பவனுக்குத் துணை போகிறீர்கள். உங்களுக்கு வெட்கமாய் இல்லை...."

கூட்டத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. மேடையை நோக்கி செருப்புகளும் கற்களும் வந்தன சிவஞானமும் பிரமுகர்களும் தப்பினால் போதுமென ஓட்டமெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. அழகலாதன செயேல்

சந்தணபுரத்தில் ஆறுமுகசாமி என்றொரு பெரியார் இருந்தார். அவருக்கு எட்டுப்பிள்ளைகள். மூத்தமகனின் வயது பதினைந்து. அவர் சிறிய வியாபாரத்தலம் ஒன்றை நடாத்தி தனது ஜீவனத்தை நடத்திக்கொண்டிருந்தார். ஆறுமுகசாமி மிகவும் நல்லவர். தீயவழியில் செல்லாதவர். நியாயமான விலையில் நல்ல பொருட்களைக் கொள்வனவு செய்து தனது வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து கொண்டிருந்தார். அவரது கடையில் எந்நாளும் கூட்டம் இருக்கும். ஆறுமுகசாமி மிகவும் நேர்மையாக நடந்து கொள்வதால் அவ்வூர் மக்கள் அவரின் மேல் நம்பிக்கை வைத்திருந்தனர். அவரது கடையில் கலப்படப் பொருட்களைக் காணமுடியாது. எந்த வேளையிலும் அவரிடம் வாங்கிய பொருள் நிறை குறைந்தது கிடையாது. இதனால் அவருக்கு லாபம் வருவது குறைவு. அவர் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. தனது தொழிலை நாணயமாக நடத்திக்கொண்டிருந்தார்.

ஆறுமுகசாமி மிகுந்த கடவுள் பக்தி உள்ளவர். காலையும் மாலையும் அவரின் வீட்டிற்கருகில் உள்ள பிள்ளையார் கோயிலிற்கு சென்று வணங்குவார். வறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இரப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாது தன்னாலானவற்றைக் கொடுப்பார். மதிய வேளை உணவை உண்ணும்போது யாராவது ஒரு அதிதியை அழைத்து வந்து தன்னுடன் இருத்தி உணவு கொடுத்து தானும் உண்பார். அதை அவர் ஒரு வழக்கமாகப் போற்றி வந்தார்.

ஆறுமுகசாமியின் கடைக்கு எதிரே குமாரசாமி என்று ஒருவன் கடை நடத்தி வந்தான். குமாரசாமி இரக்கம் இல்லாதவன். நீதிக்கு புறம்பான காரியங்களை துணிவுடன் செய்பவன். பழி பாவங்களுக்கு அஞ்சாதவன். கலப்படம் செய்வதில் வல்லவன். அதனால் மக்கள் அவனிடம் பொருட்கள் வாங்கச் செல்வதில்லை. ஆறுமுகசாமி மீது குமாரசாமி பொறாமைப்பட்டான். இதனால் அவன் மனதில் ஆறுமுகசாமியை பழிவாங்க வேண்டுமென்ற எண்ணம் தீயாய் எரிந்து கொண்டிருந்தது.

சந்தணபுரத்தில் சுந்தரபாண்டியச் செட்டியார் என்றொரு வணிகர் இருந்தார். அவரிடம் ஒரு கப்பல் இருந்தது. அக்கப்பல் மூலம் செட்டியார் வெளிநாடுகளிலிருந்து பொருட்களை ஏற்றிவந்து சந்தணபுரத்தில் விற்றார். சந்தணபுரத்தில் உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி கப்பலில் ஏற்றிச் சென்று பிறநாடுகளில் விற்பனை செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் இரவு குமாரசாமி தனது கையாட்களை ஏவி ஆறுமுகசாமியின் வர்த்தக நிலையத்திற்குத் தீவைத்தான். நள்ளிரவு வேளையாகையால் மக்கள் எழுந்து வருமுன் ஆறுமுகசாமியின் வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து சாம்பலாகிவிட்டது.

ஊரில் உள்ள அனைவரும் ஆறுமுகசாமியின் வீட்டுக்குவந்து துக்கம் விசாரித்துச் சென்றனர். குமாரசாமியும் துக்கம் விசாரிக்க ஆறுமுக சாமியின் வீட்டுக்கு வந்தான். "யாரோ தீயவர்கள் தான் தர்மமான முறையில் வர்த்தகம் செய்யும் உங்கள் கடைக்குத் தீ வைத்திருக்கிறார்கள். உமக்கு எதிரிகள் யாராவது இருக்கிறார்களா..?" என்று கேட்டான் குமாரசாமி.

"எனக்குத் தெரிந்தவரை எனக்கு எதிரிகள் யாரும் இல்லை. நான் யாருக்கும் தீமை செய்வதில்லை மற்றையோர்க்கு வேண்டிய உதவியைச் செய்யவேண்டுமே தவிர துன்பஞ்செய்யக் கூடாது. நாம் பிறருக்குச் செய்யுந்துன்பங்கள் காலப்போக்கில் எம்மை வந்தடையும் என்று தர்மநூல்கள் கூறுகின்றன. அதன்படி நான் ஏதோ தவறுசெய்துவிட்டேன் போல் தோன்றுகின்றது. செயல்கள் மூலம் செய்வது மட்டும்தான் பாவமல்ல மனதால் நினைப்பதுவும் பாவம்தான். இழிவான செயல்களை நினைத்தாலே பாவம். நம்மைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ந்துவிடும். கடைசிவரையும் குற்றம் செய்யாதவர்களுக்கு கிடைக்கமாட்டாது. எனவே நிகழ்ந்ததையிட்டு நான் தண்டனைக்காக கவலைப்படவில்லை?” என்றார்.

அதைக் கேட்ட குமாரசாமிக்கு வெட்கமாக இருந்தது. “பெரியவர்கள். தர்மநூல்கள் எல்லாம் பாவமென்று விலக்கிவைக்கச் சொன்னவற்றை செய்பவர்கள் தான் இன்று வசதியாகவும் இன்பமாகவும் வாழ்கிறார்கள்” என்றான்.

“கானல் நீரை நம்பி ஓடும் விலங்குகளைப்போல் மனிதர்களில் பலர் உன்னைப்போல் தான் நினைக்கிறார்கள். எதற்கும் நாம் ஒளித்துக் கொள்ளலாம். தர்மத்திற்கு ஒளித்துக்கொள்ள முடியாது. ஏனெனில் தர்மத்தின் கண்களாக சூரியனும் சந்திரனும் இருக்கிறார்கள். சூரிய ஒளிபடாத ஓர் இடம் உலகில் உண்டா? எமது பார்வைக்கும் எண்ணத்திற்கும் அப்பாலும் பலவிடயங்கள் நடைபெறுகின்றன. நாம் பார்க்காவிட்டால் நடைபெற்ற சம்பவம் பொய் என்று சொல்ல முடியுமா...?”

குமாரசாமிக்குப் பயமாக இருந்தது. பொறாமை காரணமாகத் தான்செய்த கொடுமைகளை நீதிப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகசாமியின் முகத்தைப் பார்க்கவே அவனுக்கு வெட்கமாக இருந்தது. அவரது மனம் செய்வதறியாது கலங்கியது.

வியாபார நிலையம் எரிந்த பின் மிகவும் கஷ்டப்பட்டார் ஆறுமுகசாமி. பத்துப்பேருக்கும் உணவு கொடுக்க முடியாது திண்டாடினார். குமாரசாமி தன்னுடைய வியாபார நிலையத்தில் வந்து வேலை செய்யும்படி வற்புறுத்திக் கேட்டும் ஆறுமுகசாமி அவரின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டார். அவரது மனைவி யசோதா கஷ்டத்தின் நிமித்தம் சொன்னாள், "நான் இது நாள் வரை உங்களுக்குப் புத்திமதி சொன்னது கிடையாது. நீங்கள் ஊரில் உள்ளவர்களுக்குப் புத்திமதி கூறுவதால் நான் உங்களுக்குச் சொல்ல முடியாது. ஆனால் இன்று சமைப்பதற்கு எதுவும் இல்லை. குமாரசாமியின் கடையில் வேலை செய்தால் என்ன?"

ஆறுமுகசாமி சிரித்தார், "இவ்வளவு காலமும் நான் தர்மத்திற்கு மாறான எந்தச் செயல்களையும் செய்ய வில்லை. குமாரசாமி தர்மமான செயல்கள் எதனையும் செய்வதில்லை. அப்படி இருக்க நான் எப்படி அவனிடம் வேலை செய்ய முடியும்? என்னால் பொருட்களில் கலப்படம் செய்ய முடியுமா? இல்லாவிட்டால் கலப்படஞ் செய்த பொருட்களை விற்க முடியுமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எவ்வளவு தான் கஷ்டம் வந்த போதிலும் இழிவான செயல்களைச் செய்யக்கூடாது. கற்ற மாணவர்களுக்குச் சோதனை வைப்பது போல் இறைவன் என்னையும் சோதிக்கிறார். ஆனால் நான் கடைசி வரையும் என்னை இழக்க மாட்டேன்"

அதன்பின் யசோதா அவரை வற்புறுத்தவில்லை. ஊரில் உள்ள பலர் ஆறுமுகசாமிக்கு உதவிகள் புரிந்தனர்.

சுந்தரபாண்டியச் செட்டியார் தன்னிடமிருந்த முழுப்பொருட்களையும் திரட்டி முதலாக்கி கப்பலில் ஏற்றினார். அவரது கப்பல் அடுத்த நாட்டிற்குச் சென்றது. நடுக்கடலில் கப்பல் செல்லும்போது பலத்த சூறாவளி ஏற்பட்டது. சூறாவளி ஓய்ந்து ஒருமாதம் கழித்தும் கப்பல் சென்றடைய வேண்டிய இடத்தை சென்று அடைய வில்லை. கப்பல் கடலினுள் மூழ்கி விட்டதாகச் செட்டியார் கருதினார். அவரிடமிருந்த பொருள் முழுவதும் போய்விட்டது. அத்துடன் கடன்காரர் தமக்குத் தரவேண்டியவற்றைத் தரும்படி செட்டியாரை வற்புறுத்தினர். செட்டியார் செய்வதறியாது திகைத்தார். அவர் குமாரசாமியிடமும் பெருந்தொகைப் பணத்தைப் பெற்றிருந்தார். குமாரசாமி தினமும் வந்து தொல்லை கொடுத்ததால் தனது மனைவியின் நகைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாகக் கொடுப்பதற்காக முடிச்சாகக் கட்டி குமாரசாமியின் வீட்டிற்குச் கொண்டு சென்றார்.

அந்த நகைமுடிச்சு வழியில் தவறிவிட்டது. சுமார் நூறுபவுண் நகை அம்முடிச்சில் இருந்தது. செட்டியார் கலங்கிப் போனார். அந்த சோகத்தை அவரால் தாங்க முடியவில்லை. துயரத்துடன் வீட்டுக்குச் சென்றார்.

ஆறுமுகசாமி பட்டணத்திற்கு அலுவலாகச் சென்று திரும்பிக்கொண்டிருக்கும் போது பாதையின் ஓர் ஓரத்தில் ஒரு முடிச்சுக் கிடப்பதை கண்டு எடுத்து அவிழ்த்துப் பார்த்தார். அதனுள் ஏராளமான நகைகள் இருப்பதை கண்டார். அதைப் பத்திரமாக முடிந்தார். தமது கைப்பைக்குள் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். மறுநாள் ஊரில் உள்ளவர்கள் செட்டியாரின் நகைகள் முடிச்சுடன் தொலைந்ததாகப் பேசிக்கொண்டனர். தனது மனைவிக்குக் கூடச் சொல்லாது மறைத்து வைத்திருந்த நகைமுடிச்சை எடுத்துக் கொண்டு செட்டியாரின் வீட்டிற்குச் சென்றார் ஆறுமுகசாமி.

ஆறுமுகசாமி செட்டியாரிடம் நகைகளை ஒப்படைத்த போது செட்டியார் நெகிழ்ந்து போனார். "ஐயா தர்மவழியில் சேர்த்த பொருளை யாரும் ஒரு போதும் கவரமுடியாது. அத்துடன் எவ்வளவுதான் கஷ்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபோதும் பிறரின் சொத்தை அபகரித்தல் பாவம்" என்றார் ஆறுமுகசாமி.

"உம்மைப்போல் மனிதர்கள் இருப்பதால் தான் மழை பெய்கிறது. உலகம் வாழ்கிறது. எனது கப்பல் மூழ்கியதால் எனது பொருள் யாவற்றையும் இழந்துவிட்டேன். வாழ்வை வெறுத்த எனக்கு உமது செயல் வாழ்வின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்த உதவியை கடைசிவரையும் மறக்க மாட்டேன்" என்றார்.

"நல்லவர்களுக்கு வரும் துன்பங்கள் காரிருள் சூரியனை மறைப்பது போன்றது. உங்களுக்கு கட்டாயம் விடிவுகாலம் வரும்" என்று கூறிவிட்டுச் சென்றார் ஆறுமுகசாமி.

வாரம் ஒன்று கழிந்தது. மூழ்கி விட்டதாகக் கருதிய செட்டியாரின் கப்பல் சென்று அடைய வேண்டிய நாட்டை அடைந்ததாகத் தகவல் வந்தது. செட்டியாரின் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. மறுவாரம் பொருட்களுடன் செட்டியாரின் கப்பல் நாடு திரும்பியது. எதிர்பார்த்ததை விட செட்டியாரிற்கு அதிக லாபம் கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டியார் ஆறுமுகசாமியின் வீட்டிற்குச் சென்றார். ஆறுமுகசாமி செட்டியாரை வரவேற்று ஆசனத்தில் இருத்தினார்.

"எல்லாம் நன்மைக்கே என்று சொல்வார்கள். எனது கப்பல் மூழ்கியதாக கதை பரவியதும் உமது கடை எரிந்ததும் நன்மைக்குத்தான். அதனால் மனிதர்களை என்னால் இனங்காண முடிந்தது. உம்மைப் போன்ற ஒரு மனிதனைக் காணமுடியாது. நீர் எனது கப்பல் வாணிபத்திற்குப் பொறுப்பாக இரும். மாதம் பத்தாயிரம் ரூபா சம்பளமாகத் தருகிறேன்" என்றார் செட்டியார்.

ஆறுமுகசாமி தடுமாறினார். அதை உணர்ந்த செட்டியார் சொன்னார். "நான் இவ்வளவு காலமும் இழிவான எந்தச் செயல்களையும் செய்யவில்லை. அதனால் தான் தொலைந்துவிட்டதாகக் கருதிய எனது பொருள்கள் அனைத்தும் எனக்கு கிடைத்தன. இனிமேலும் நான் இழிவான செயல்களைச் செய்யமாட்டேன்" என்றார்.

ஆறுமுகசாமி மகிழ்ச்சியுடன் ஒத்துக்கொண்டார். அவருக்கு கடையில் கிடைக்கும் வருமானத்தை விட பலமடங்கு பணம் சம்பளமாகக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. இளமையிற் கல்

மங்களபுரி அரசன் மகேந்திரவர்மன் நாட்டை நெறிமுறை தவறாது ஆண்டுவந்தான். மகேந்திரவர்மன் சகல யுத்தப் பயிற்சிகளையும் பெற்றிருந்தான். அவனுக்கு இணையான வீரன் இல்லையெனும் அளவிற்கு அவன் பெரும் வீரனாகத் திகழ்ந்தான். தனது நாட்டுக்கு அயலிலுள்ள நாடுகளனைத்தையும் கைப்பற்றி தனக்கு விசுவாசமானவர்களை சிற்றரசர்களாக நியமித்து நீதி நெறி தவறாத முறையில் நல்லாட்சி புரிந்து வந்தான். அத்துடன் தனது ஆட்சிக்குட்பட்ட சகல நாடுகளையும் சமமாக மதித்து வந்தான். இதனால் அவனது ஆட்சிக்குட்பட்ட அனைத்து நாட்டு மக்களும் மகேந்திரவர்மனை மதித்து நடந்தனர்.

மகேந்திரவர்மனின் நீதிவழுவாத ஆட்சியினால் பல நாட்டு மக்கள் மனமகிழ்ந்து குதூகலித்த போதும் மன்னன் மனதில் மட்டும் ஒரு பெருங் குறை இருந்தது. அவன் மணம் முடித்து பத்து ஆண்டுகள் கழிந்த போதும் அவனுக்குப் புத்திர பாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் மகேந்திரவர்மன் மிகவும் மனம் வருந்தினான். அவனைவிட மகாராணி ரதிதேவி மிகவும் மனம் வருந்தினாள். அரசன் தனது ஆணைக்குட்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துச் சோதிடர்களையும் அழைத்து தனக்கு எப்போது குழந்தைப் பாக்கியம் கிடைக்குமென கணித்துச் சொல்லுமாறு கேட்டான். அத்துடன் முனிவர்களையும் ரிஷிகளையும் அழைத்து தனக்கு குழந்தை கிடைப்பதற்கான சடங்குகளையும் யாகங்களையும் செய்தான். சோதிடர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லி ஒரு நாளைச் சொல்லிவிட்டுச் சென்றனர்.

மன்னன் சோதிடர்களுக்கும், யாகஞ் செய்பவர்களுக்குமென ஏராளமான பொன்னையும் மணியையும், முத்தையும், இரத்தினத்தையும் கொடுத்ததுதான் மிச்சம். குழந்தை பிறக்கவில்லை.

இதனால் மிகவும் வருந்தியவர் மகேந்திரவர்மனின் தந்தையான சூரசேனர் தான். மகேந்திரவர்மனுடன் தனது வம்சம் அழிந்துவிடுமோவென அஞ்சினார். அத்துடன் பேரனைக் கண்குளிரப் பார்த்துவிட்டுத் தான் சன்னியாசம் செல்லவேண்டுமென எண்ணியிருந்தார். அந்த எண்ணமும் ஈடேறாது விட்டால் தனது சந்ததி அழிவதோடு தீராத பாவஞ்செய்த சந்ததியாகி விடுமோ எனப் பயந்தார். இதனால் மகனை அழைத்துச் சொன்னார். “மகேந்திரா, நீ திருமணஞ் செய்து பத்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் உனக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை. அது எனக்கு மிகுந்த மனக்கவலையை தருகிறது. அரசர்களுக்கு புத்திரர்கள் இல்லாவிட்டால் அவர்களது வம்சமே அழிந்துவிடும். நாடு நிர்க்கதியாகிவிடும். நாட்டை ஆள வாரிசு இல்லாமல் போனால் எவ்வளவு பழிவரும் தெரியுமா? அதனால் உனக்கு வேலூர் சிற்றரசரின் மகளான பூங்கோதையை மணம் முடித்துவைக்க விரும்புகிறேன்" என்றார்.

மகேந்திரவர்மன் வெகு நேரம் பேசாது இருந்தான். அவனது மனதில் அரசியாரின் நினைவு நிழலாடியது. பாண்டியப் பேரரசரின் மகளான அவளைத் தான் திருமணஞ் செய்வதற்குப்பட்ட கஷ்டங்களை நினைத்துப் பார்த்தான். எத்தனையோ பெரும் பெரும் அரசர்கள் அவளைத் திருமணஞ் செய்வதற்குப் போட்டியிட்ட போதும் அவள் பிடிவாதமாக மகேந்திரவர்மனையே திருமணஞ் செய்ய வேண்டுமென்று தகப்பனுடன் வாதிட்ட நினைவு அவன் மனதைக் குடைந்தது.

"சொல்லு மகேந்திரா...." சூரசேனர் கேட்டார். வில்வராஜ அடிகள் மூன்று மாதங்களுக்குள் அரசியார் கர்ப்பமடைவார் என்று கூறி பூஜை செய்துள்ளார். அதன் பின் பார்ப்போம்" என்று சொன்னான் மகேந்திரவர்மன். எனினும் அவனது மனம் அல்லற்பட்டது. தினமும் அரண்மனையிலிருந்த விநாயகரை வணங்கி வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாதங்கள் கழிந்தன. அரசியார் கர்ப்பமுற்றிருப்பதாக அரண்மனை வைத்தியர் கூறினார். எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர். பத்துமாதங்கள் கழிந்தன. அரசியாரிற்கு அழகான ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு மணிமாறன் எனச் சூரசேனர் பெயர் சூட்டினார். மணிமாறன் வளர்ந்து வந்தான். பலவருடங்கள் கழித்து மணிமாறன் பிறந்தமையால் அரசியார் அவனை மிகவுஞ் செல்லமாக வளர்த்தார். அவனை நிலத்தில் ஓடிவிளையாட விடுவதே இல்லை. எந்த நேரமும் அரசியின் மடியிலேயே அவன் வளர்ந்து வந்தான்.

மணிமாறன் பிறந்து நான்கு வருடங்களுக்கு பின் அரசியாருக்கு இன்னுமொரு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு வேல்மாறன் என்று பெயர் சூட்டினார்கள். மணிமாறன் வளர்ந்ததும் அவனுக்கு கல்விகற்பிக்கவும் வித்தைகள் கற்பிக்கவும் அரச குருவான ஞானோதயரிடம் ஒப்படைத்தனர். மிகவும் செல்லமாக வளர்ந்த மணிமாறன் கல்வியில் அதிக அக்கறை காட்டவில்லை. எந்நேரமும் தாயின் அரவணைப்பு அவனுக்குத் தேவைப்பட்டது. அதனால் குருகுலத்திலிருந்து அடிக்கடி அரண்மனைக்கு வந்துவிடுவான். இதனால் மனம் வருந்திய ஞானோதயர் மணிமாறனை அழைத்துச் சொன்னார். மணிமாறா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகுமாரர்கள் பெற்றவர்களுக்கு மட்டும் சொந்தமானவர்கள் அல்ல; அவர்கள் நாட்டுக்குச் சொந்தமானவர்கள். அவர்கள் இளமையில் சகல வித்தைகளையும் கற்றுத் தேர்ந்திட வேண்டும். அவர்கள் சிறந்த வீரர்களாகாவிட்டால் நாட்டிற்குப் பெருங் கேடு உண்டாகும். அரசகுமாரர்கள் தான் நாட்டின் எதிர்காலத்தை நிச்சயிப்பவர்கள். அரசகுமாரர்கள் வித்தைகளில் வல்லவர்களாகவும், அறிஞர்களாகவும், தீர்க்க தரிசனம் மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும். அதற்கு உதவுவது தான் கல்வி. அதை நீ உதாசீனம் செய்கிறாய். அது உனக்கும் கூடாது; உனது நாட்டுக்கும் கூடாது என்றார். மணிமாறன் அவரது புத்திமதிகளைக் கேட்கவில்லை.

மேலும் ஐந்துவருடங்கள் கழிந்தன. வேல்மாறன் கல்வி கேள்விகளிலும் போர்ப்பயிற்சிகளிலும் சிறந்து விளங்கினான். ஓர் அரசனுக்குரிய அத்தனை அம்சங்களும் அவனிடமிருந்தன. மணிமாறன் சோம்போறியாக இருந்தான். முறையான போர்ப்பயிற்சிகளைப் பெற்றிருக்கவில்லை.

மகேந்திரவர்மனுக்கு வயதாகிவிட்டது. நாட்டுப்பொறுப்பை தனது மகனிடம் ஒப்படைக்க விரும்பினான். அரச வழக்கப்படி மூத்த மகனிற்குத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுரிமை உரித்துடையது. ஆனால் அரசன் வேல்மாறனிடமே அரசை ஒப்படைக்க விரும்பினான். இது மணிமாறனுக்கு பிடிக்கவில்லை. தந்தையுடன் அரசுரிமை தனக்குரியது என வாதிட்டான்.

"மணிமாறா இப்பொழுது கூட காலம் கடந்து விடவில்லை. நீ ஞானோதயரின் ஆச்சிரமத்திற்குச் சென்று சகல வித்தைகளையும் கற்றுத் தேர்ந்தாயானால் உனக்கு முடிசூடலாம்" என்றான் மகேந்திரவர்மன்.

மணிமாறன் ஞானோதயரின் ஆச்சிரத்தற்குச் சென்று வித்தைகளைக் கற்கத் தொடங்கினான். எனினும் அவனால் ஒழுங்காகக் கற்கமுடியவில்லை. அதைக்கண்ட ஞானோதயர் சொன்னார். மணிமாறா, இளமைப் பருவத்தில் தான் வித்தைகளைக் கற்றுக்கொள்ள முடியும். ஏனெனில் அப்பருவம் சுதந்திரமான பருவம். வேறு எண்ணங்களோ வேலைகளோ இல்லாத பருவம். உடலும் இலகுவாக வளைந்து கொடுக்கும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். பிரம்மச்சரியப் பருவத்தில் கற்கவேண்டியவற்றை கிருகஸ்தனாக இருந்து கொண்டு கற்கமுடியாது. இப்பருவத்தில் எண்ணங்கள் யாவும் அலை மோதும். மனைவியைப் பற்றிய நினைப்பு உனக்கு அடிக்கடி வருகிறது. அந்த எண்ணத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பவர்களால் மனதை ஒரு நிலைப்படுத்தி வித்தைகளைக் கற்கமுடியாது என்றார்.

திடீரென சிற்றரசர்கள் இருவர் ஒன்று சேர்ந்து மங்களபுரியின் மீது படையெடுத்தனர். மகேந்திரவர்மன் மணிமாறனது வீரத்தை பரீட்சிப்பதற்காக மணிமாறனின் தலைமையில் ஒரு படையை அனுப்பினான். ஓரிரு நாட்களில் மணிமாறனின் படை பின் வாங்கியது. சிற்றரசர்களின் படை மணிமாறனின் படையைத் தோற்கடித்தது. அதை எதிர்பார்த்துப் பின்னால் சென்ற வேல்மாறனின் படைகள் சிற்றரசர்களின் படையைத் தோற்கடித்து சிற்றரசர்கள் இருவரையும் கைது செய்து வந்து மகேதிரவர்மனின் முன் நிறுத்தியது.

அதனால் மனம் மகிழ்ந்த மகேந்திரவர்மன் நல்லதொரு நாளிலே வேல்மாறனுக்கு முடி சூட்டி வைத்தார். மணிமாறன் தான் இளமையில் கற்காததை நினைத்து வருத்தப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. அறனை மறவேல்

மருத நாட்டில் அரசன் வேல்மாறன் நற்குணங்கள் மிக்கவன். நாட்டை நீதியுடன் ஆண்டு வந்தான். நாட்டில் மக்கள் எவ்வித குறைகளுமின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். நாட்டில் மும்மாரி பொழிந்தது. வயல்களில் நெல் நன்றாக விளைந்தது. எனினும் வேல்மாறன் ஆராய்வறிவற்றவன். தாழ்வுணர்வு உள்ளவன். பெரும் பெரும் காரியங்களைச் செய்த பின்பும் திருப்திப்படாதவன். இதனால் அவனுக்குப் பல இன்னல்கள் அடிக்கடி வரும் தன் சொற்படிதான் எல்லாம் நடக்கவேண்டும் என்று நினைப்பவன்.

மருதநாட்டின் மத்தியில் அமர்ந்திருந்து அந்நாட்டு மக்களுக்கு அருளை வழங்கிக் கொண்டிருப்பவர் பொற்பதி விநாயகர். பொற்பதி விநாயகர் ஆலயம் மிகவும் பெரியது. நான்கு வாசல்களிலும் இராசகோபுரம் அமைக்கப்பட்ட ஆலயம். மன்னர் பரம்பரையினர் அவ்வப்போது ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்வதுண்டு. வேல்மாறன் பொற்பதி விநாயகர் மீது அதிக பக்தியுள்ளவன். வருடாவருடம் மானியமாக வேண்டியளவு பொருட்களை அளிப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்பதி ஆலயத்தின் நான்கு வீதிகளிலும் அன்னதான மடங்கள் கட்டப்பட்டிருந்தன. மகோற்சவ காலங்களிலும் விசேட தினங்களிலும் அன்னதானம் நடைபெறும். மகோற்சவ காலங்களில் அரசனும் மற்றைய நாட்களில் மக்களும் அன்னதானம் செய்வார்கள். விசேட தினங்களில் பெரும் பொங்கல் பூசைகள் நடைபெறும். பொதுவாக தினமும் யாராவது ஒருவராவது பிள்ளையாருக்குப் பொங்கிப் படைக்காமல் விடமாட்டார்கள். அவர் அமர்ந்திருக்கும் பிரதேச மக்கள் மட்டுமன்றி அந்த நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்களும் பொற்பதி விநாயகரைத் தரிசிக்கத் தவறுவதில்லை.

பொற்பதி ஆலயத்தில் வேலாயுதம் என்றொருவர் ஐம்பதாண்டு காலமாக வாழ்ந்து வருகிறார். ஆரம்பத்தில் வேலாயுதன் என்று அழைத்த மக்கள் பின்பு வேலாயுதம் என்றும் பின் சாமியார் என்றும் அழைத்தனர். பின் பிள்ளையாரின் பெயரிலேயே பொற்பதிச் சாமியார் என்று அழைக்கத் தொடங்கினார். பொற்பதிச் சாமியார் பிள்ளையாருடன் கதைத்து விளையாடுபவர் என்று அவ்வூர் மக்கள் பேசிக் கொள்வார்கள். காலையில் குளித்துவிட்டு நிஷ்டையில் இருப்பார். பூசை வேளைகளில் இனிமையாகத் தேவாரம் பாடுவார். பின் கோயிலின் உட்புறம் முழுவதையும் கூட்டித் துப்பரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார். எஞ்சியுள்ள வேளைகளில் கோயிலின் கோபுர வாசலிற்கு அருகில் பெரிய விருட்சமாக நிற்கும் அரசின் கீழ் இருப்பார். அவரைச் சுற்றி மக்கள் எப்பொழுதும் கூடியிருப்பார்கள். அவர் புராண இதிகாச கதைகளை மக்களுக்கு சுவைபடக் கூறுவார்.

பெரியவர்கள் மட்டுமன்றி சிறியவர்கள் கூட அவரிடம் கதைகேட்க வருவதுண்டு சிறுவர்களுக்கு ஏற்ற நீதிக்கதைகள் பல கூறுவார். அவற்றில் விக்கிரமாதித்தன் கதை கேட்க சிறுவர் கூட்டம் பாடசாலை இல்லாத நாட்களில் கூடும். பெரியவர்களுக்கு கடவுளின் மகிமை பற்றியும் அவரது திருவிளையாடல்கள் பற்றியும் கூறுவார். அத்துடன் சோதிடக்கலையிலும் அவர் வல்லவர். ஜாதகமோ பிறந்த நட்சத்திரமோ பாராது ஒருவரின் முகத்தைப் பார்த்து எதிர்காலப் பலன்களைப் பற்றிக் கூறுவார். அத்துடன் நாட்டில் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைப் பற்றியும் கூறுவார். அவர் கூறுவதுபோல் அனேகமாக நடந்துவிடும். ஒருமுறை பெரும் புயல் வீசுமென்றும் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்களெனக் கூறினார். அவரது சொல்லைக் கேட்ட மக்கள் வீடுவாசலை விட்டு வெளியேறி கோயில்களில் தங்கியமையால் அழிவுகளிலிருந்து தப்பிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் வேல்மாறன் யானையின் மீது ஏறி பொற்பதி விநாயகரைத் தரிசிக்க வந்தான். பொற்பதி சுவாமியார் அரசமர நிழலில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி பெருந்தொகையான மக்கள் அமர்ந்திருந்தனர். அரசனைக் கண்டதும் மக்களெல்லோரும் எழுந்து மரியாதை செய்தனர். பொற்பதி சுவாமியார் எழுந்து மரியாதை செய்யவில்லை அதை வேல்மாறன் கண்டான். அவர் எழுந்து மரியாதை செய்யாதது அவனுக்குக் கோபத்தை உண்டாக்கியது.

கோவிலினுள் சென்ற அரசனும் படையினரும் பொற்பதி விநாயகரை வணங்கி ஆராதனை செய்தனர். பூசை முடிந்ததும். மன்னன் அரண்மனையிலிருந்து கொண்டுவந்த நைவேத்தியங்களை மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கும்படி கூறினான். அரசனின் ஏவலாளர்கள் அவற்றை மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தனர். மக்கள் அரசனைப் பணிந்து வணங்கிவிட்டு பிரசாதத்தைப் பெற்றுச் சென்றனர். ஆனால் பொற்பதிச் சுவாமியார் இருப்பிடத்திலிருந்து எழுந்து வரவில்லை. அதையும் வேல்மாறன் கவனித்தான்.

மறுநாள் அரச ஏவலாளர்கள் பொற்பதி விநாயகர் ஆலயத்திற்கு வந்து பொற்பதி சுவாமியாரை அரண்மனைக்கு வரும்படி அரசன் கூறியதாக கூறிச் சென்றனர். பொற்பதி சுவாமியார் அதைக் காதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிக் கொள்ளவில்லை. தான் அழைத்தும் பொற்பதிச் சுவாமியார் தன்னைவந்து சந்திக்காதது வேல்மாறனுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. மீண்டும் ஒருமுறை தனது ஏவலாளர்களை அனுப்பி சுவாமியாரை வரும்படி கோரினான்.

பொற்பதிச் சுவாமியார் அரசனின் அழைப்பை ஏற்று அரண்மனைக்குச் சென்றார். அரசன் மிகவும் ஆடம்பரமாக அவரை வரவேற்று ஆசனத்தில் இருத்தினான். பணிப்பெண்கள் அறுசுவை உணவுகளையும் பானங்களையும் கொண்டுவந்து வைத்தனர்.

பொற்பதிச் சுவாமியார் அரசனுக்கு மரியாதை செய்வதற்காக ஒரு இனிப்புத் துண்டை எடுத்து வாயில் போட்டார். பானத்தை எடுத்துப் பருகினார். அதன் பின் சுவாமியார் எழுந்தார். "அரசே! தங்கள் ஆட்சியில் நாடு இன்னும் பல முன்னேற்றங்களை காணவுள்ளது" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அரசன் அவரைப் போகவிடாது தடுத்தான். சுவாமி நீங்கள் ஏன் அரசமரத்தின் கீழ் இருந்து கஷ்டப்படுகிறீர்கள்? அரண்மனையிலேயே இருங்கள். தினமும் அறுசுவை உணவுகளை உண்ணலாம்; பஞ்சு மெத்தையில் உறங்கலாம் என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியார் சிரித்தார். "மன்னவா நான் அறுசுவை உணவையும் பஞ்சுமெத்தையையும் விரும்பியிருந்தால் என்றோ இந்த நாட்டைக் கைப்பற்றி ஆண்டிருக்கலாம். நீ தரும் எல்லாவற்றையும் விட விநாயகரின் அரசமரநிழல் மேலான சுகத்தைத் தரும்"

"நான் தரும் இந்தப் பொருட்களையாவது ஏற்று என்னை மகிழ்வியுங்கள்"

"எனக்கு எந்தப் பொருளும் வேண்டாம். மன்னா, தயவு செய்து என்னை வற்புறுத்தாதே" என்று கூறிவிட்டுச் சுவாமியார் சென்றுவிட்டார்.

அன்று இரவு கடும் மழை பெய்தது. வேல்மாறன் தனது ஏவலாளர்களை அழைத்து பொற்பதி விநாயர் ஆலய பெட்டகத்தில் உள்ள நகைகளைத் கவர்ந்து வரும்படி கூறினான். ஏவலாளர்கள் அரசனின் கட்டளைப்படி கோயிலின் பெட்டகத்தை உடைத்து நகைகளைக் கவர்ந்து சென்று அவனிடம் கொடுத்தனர்.

மறுநாள் ஆலயம் உடைக்கப்பட்டு திருடப்பட்டதை அறிந்து வேல்மாறன் பொற்பதிச் சாமியாரை கைது செய்து அரண்மனைக்கு கொண்டு வரும்படி கட்டளையிட்டான். போர்வீரர்கள் வேறுவழியின்றி விநாயகரிடம் பழியை ஒப்படைத்துவிட்டு பொற்பதிச் சாமியாரைக் கைது செய்து அழைத்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் கடுஞ்சினத்தோடு சொன்னான் "எனக்கு உம்மீது தான் சந்தேகம் உள்ளது. நீர்தான் இரவு பகலாக ஆலயத்தில் இருக்கிறீர். உமக்குத் தெரியாமல் களவு நடைபெற்றிருக்காது. களவாடிய நகைகளை எங்கே வைத்தீர் சொல்லும்"

சுவாமியார் பேசாது இருந்தார். அரசன் திரும்பத் திரும்ப அதையே கேட்டான். "நீர் பேசாது இருப்பது குற்றத்தை ஒப்புக் கொள்வதைப் போல் இருக்கிறது" என்றான். அதற்கும் சுவாமிகள் எதுவும் பேசவில்லை அதனால் ஆத்திரமடைந்த மன்னன் "இந்தப் பரதேசியை சிரத்சேதம் செய்யுங்கள்" என்றான்.

சபை ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றது. மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். முதலமைச்சர் எழுந்து "அரசே தீரவிசாரியாமல் தீர்ப்புக் கூறுவது முறையல்ல" என்றார்.

"சுவாமி என்ற போர்வையிலிருக்கும் இவன் ஏன் மௌனியாய் இருக்கின்றான்?"

"நான் அறிந்தவரை சுவாமிகள் திருடியிருக்க மாட்டார்கள். திருடினால் பொருட்களை எங்கே அவர் வைத்திருக்க முடியும்" என்றார் முதலமைச்சர்.

"அதை அவனல்லவா சொல்லவேண்டும்." அரசன் கர்ஜித்தான். அப்பொழுது ஏவலாளன் ஒருவன் திடீரென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்விழுந்து நிலத்தில் வீழ்ந்தான். சுவாமியார் அவனைப் பார்த்தார். பின் "அரசே திருட்டுப் பொருட்கள் எங்கே இருக்கின்றன என்று நான் கண்டுபிடித்து விட்டேன்" என்றார்.

சபையில் சிறிது சலசலப்பு; "நான் சொல்லவா அல்லது.... "சுவாமியார் முடிக்கு முன்பு அரசன் சொன்னான் சொல்லும்".

"அரண்மனைப் பெட்டகத்தில் இருப்பதாகப் பொற்பதி விநாயகர் சொல்லுகிறார் சோதனையிட்டுப் பாருங்கள்"

மயங்கிச் சரிந்த வீரன் திடீரென உருக்கொண்டு ஆடினான். "அரசன் தான் திருடன். அரசனின் பெட்டகத்தில் நகைகள் உள்ளன. நானும் இன்னும் ஏழுபேரும் சேர்ந்து திருடினோம்"

சபை ஸ்தம்பித்தது. சுவாமியார் சொன்னார் "அறத்தைக், காப்பவனே அறத்தை மீறியுள்ளான். அரசன் எந்தவேளையிலும் அறத்தைக் காக்கவேண்டும். போரில், அரசன் செய்யும் அறம்தான் அவனது உயிரைக் காப்பாற்றுகிறது. நான் பரதேசி எனக்குப் பொற்பதி விநாயகரைத் தவிர வேறு யாரும் தேவையில்லை. பொற்பதியான் எனக்கு எல்லாம் தருவான். அரசன் ஒழுங்கானவனாக இருந்திருப்பின் அவனை மதித்திருப்பேன். மன்னா, நீ தெய்வத்திற்கு சமனானவன். இனிமேலாவது அறத்தின் வழி நட என்றார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. அனந்த லாடேல்

நல்லூரில் வேதாசலம் என்றொரு பண்டிதர் இருந்தார். அவர் இலக்கிய இலக்கண நூல்களைக் கற்றுத்தேர்ந்தவர். வேத உபநிடதங்களை கற்றுணர்ந்து உபதேசம் செய்பவர். அத்துடன் சோதிடத்திலும் வல்லவராக இருந்தார். அதனால் அவ்வூர் அரசனும் மக்களும் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர். அரசனான மகேந்திர பூபதி அவரை அரசசபையில் தங்குமாறு பலமுறை வேண்டுதல் செய்தும் அவர் அதை விரும்பவில்லை. தான் கற்ற கல்வியறிவு நாட்டுமக்களுக்கு பயன்தரவேண்டுமென நினைத்தார். அதனால் தேவையேற்படும்போது மட்டும் அரசசபைக்குச் சென்று வந்தார்.

ஊரில் அவருக்கு ஏராளமான மாணவர்கள் இருந்தனர். அவர்களுக்குக் கற்பித்ததோடு மட்டும் நில்லாது அறப் போதனைகளையும் செய்வார். சிறியவர்கள் மட்டுமன்றி பெரியவர்களும் படித்தவர்களும் அவரது போதனைகளைக் கேட்க வருவதுண்டு. மனநிம்மதியில்லாமல் தவிக்கும் காலங்களில் அரசனும் அவரது போதனையைக் கேட்க வருவதுண்டு. வாழ்க்கை கசந்து விரக்தியுற்றோர் அவரது போதனைகளைக் கேட்ட பின்பு வாழ்க்கையில் பற்றுவைத்து இன்பமாக வாழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் எந்தவொரு சிறிய விடயமானாலும் அவரது போதனைக்காக காத்திருப்பான். அவரது போதனைகள் நெடுநாள் வாடிச் சோர்ந்திருக்கும் பயிர்களுக்குப் பெருமழை பெய்தது போல் இருக்கும். அதனால் அவரை அவ்வூர் மக்கள் போற்றிப் புகழ்ந்தனர்; பெரிதும் மதித்தனர்.

அன்று வேதாசலத்தின் போதனை அவரது பள்ளியில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எமக்கு எதிரிகள் யார் என்று நினைக்கிறீர்கள். சரவணனுக்கு சுந்தரன் எதிரி, ஆரூரனுக்கு நாவலன் எதிரி இப்படித்தான் நினைக்கிறோம். இதில் எந்த விதமான உண்மையும் இல்லை. உலகில் பிறந்த எவரும் எவருக்கும் எதிரியாகிவிட முடியாது. அப்போது எமக்கு யார் எதிரி என்று கேட்டுவிட்டு சிலநிமிடம் பேசாதிருந்தார் வேதாசலம்.

மக்கள் எவரும் எதுவும் பேசவில்லை. மௌனமாக அவரின் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர் போதனை செய்யும்போது கேள்விகள் கேட்பதும் சில கணங்கள் மௌனமாக இருப்பதும் வழக்கம்.

“எமக்கு எதிரி நாம்தான். எமது நடத்தைகள் தான் எம்மைக் கெட்டவர்களாக்கியிருகிக்றன. நல்லதையே நினைத்திருங்கள். நல்லதையே செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களை மதியுங்கள். உங்களுக்கு எதிரிகள் இருக்கமாட்டார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தவறுகளை உணர்ந்துகொள்ள வேண்டும். உணரமுடியாதவர்கள் மற்றவர்கள் உணர்த்தும் போது ஆத்திரப்படாது ஆலோசனை செய்யவேண்டும். பிறருடைய புத்திசாதுரியத்தைப் புகழ்தல் வேண்டும். பாராட்டுதல் வேண்டும். எமது முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக, எதிரிகளாக எம்முள்ளேயே பலர் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றுள் முக்கியமானது நித்திரை. ஒருவன் நித்திரையை அதிகமாகச் செய்வானேயானால் அவனது முன்னேற்றம் மட்டுமல்ல, எதிர்காலம் கூடப் பாழாகும். எனவே நித்திரையை அளவாகக் கொள்ளுங்கள்" என்று கூறி அன்றைய போதனையை முடித்தார் வேதாசலம்.

வேதாசலத்தின் மீது மிகுந்த பக்தியுள்ள சீடன் அருணன். அருணன் அவ்வூர்ப் பண்ணையார் வேலாயுத மூர்த்தியின் ஒரேமகன். மிகவும் பணக்காரனான வேலாயுதமூர்த்தி தனது மகனை அரசசபையில் பெரியதொரு தொழிலில் சேர்க்க விரும்பினார். அதனால் வேதாசலத்திடம் கல்வி கற்க அனுப்பி வைத்தார்.

அருணன் கல்வியில் மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான். வேத உபநிடதங்களையும் நல்லமுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுத் தேர்ந்தான். அத்துடன் சோதிடக் கலையையும் வேதாசலத்திடம் கற்றான். அவனது கல்வியறிவைக் கண்ட வேதாசலம் மிகவும் மகிழ்ந்தார். தனக்கொரு சிறந்த மாணவனை அளித்த ஆண்டவனுக்கு நன்றி சொன்னார். அத்துடன் தனக்குத் தெரிந்த வித்தைகள் அனைத்தையும் அவனுக்குப் புகட்டினார்.

அரச சபைக்குச் செல்லும் வேளைகளில் அருணனைப்பற்றி அரசருக்கு வேதாசலம் சொல்லுவார். அரசன் அவற்றைக் கவனத்துடன் கேட்பான். அவனது மனதில் அருணனைப்பற்றிய நல்லதொரு அபிப்பிராயம் உருவாகியிருந்தது.

முதலமைச்சர் ஓய்வெடுத்ததும் அருணனைத் தனது முதலமைச்சராகவும் ஆலோசகராகவும் நியமிப்பதென்று நினைத்திருந்தார்.

அந்நாட்டின் முதலமைச்சர் தில்லைப்பாண்டியனார். அவர் மிகுந்த அறிவாளி. மதிநுட்பம் உள்ளவர். அரசன் தனது விருப்பத்தைத் தில்லைப்பாண்டியனாரிடம் தெரிவித்தார். அதற்கு முதலமைச்சர் சொன்னார், "அரசே அருணனைப்பற்றி எமக்கு எதுவும் தெரியாது. மிகவும் வேண்டியவரான வேதாசலம் அவர்கள் கூறுவதை மட்டும் வைத்துக்கொண்டு நாம் முடிவுசெய்தல் கூடாது. நாட்டின் முதலமைச்சராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரக்கூடியவரிற்கு கற்றலை விட அனுபவமும் முன்னறிவும் அதிகம் தேவை. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது என்பார்கள். நாம் சமையற்காரனைத் தெரிவு செய்யும் போது அவனது கல்வியறிவை சோதனை செய்வதில்லை. சமையலையே சோதனை செய்யவோம். அதேபோல் நாம் அருணனை அழைத்துச் சோதிப்போம்" என்றார்.

அருணன் மிகுந்த கல்வியறிவும் மதிநுட்பமும் மிக்கவனாக இருந்த போதிலும் அதிகம் நித்திரை கொள்வதில் விருப்பமுடையவன். இரவு ஏழுமணிக்கு நித்திரைக்கு சென்றானேயானால் மறுநாள் காலை பத்துமணிக்குத்தான் எழுவான். இதைப்பற்றி வேதாசலம் பலமுறை எடுத்துக் கூறியபோதும் அருணனால் அத் தீயபழக்கத்தை விடமுடியவில்லை.

அருணனைப் பரீட்சித்து தகுதிகண்டு நியமிக்கும் பொறுப்பை அரசன் முதலமைச்சாரான தில்லைப் பாண்டியனாரிடம் ஒப்படைத்தான். தில்லைப்பாண்டியனார் முதலில் அவனது குருவான வேதாசலத்தை அழைத்து அருணனைப் பற்றி விசாரித்தார். பின் அருணனைப் பரீட்சிப்பதாகக் கூறிச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வாரத்தின் பின் அருணனை அழைத்த தில்லைப்பாண்டியனார் தன்னுடன் ஒருவாரம் தங்குமாறு பணித்தார். அருணன் தில்லைப்பாண்டியனார் ஏற்பாடு செய்திருந்த மாளிகையில் தங்கினான். அவனுக்கு நேரம் தவறாது உணவு அனுப்பப்பட்டது. காலையில் ஏழுமணிக்கும் பகல் ஒரு மணிக்கும் இரவு பதினொரு மணிக்கும் உணவு வழங்குமாறு ஏவலாளர்களுக்கு கட்டளையிட்டார். தில்லைப்பாண்டியனார் காலையில் அருணன் நித்திரைவிட்டெழ பத்துமணியாகும். பின் மாலையில் ஏழுமணிக்கு அவன் நித்திரையாகி விடுவதால் இரண்டுவேளை உணவு உண்ணாமல் இருப்பதைக் கவனித்தார் தில்லைப்பாண்டியனார்.

அன்று அருணனை அழைத்த தில்லைப்பாண்டியனார் “இன்று இரவு பதினொரு மணிக்கு நான் முக்கியமானதொரு விடயமாக அரசருடன் வெளியே செல்ல வேண்டியுள்ளது; நீயும் வருகிறாய்” என்றார்.

அன்று இரவு பதினொரு மணிவரை அருணன் குறிப்பிட்ட இடத்திற்கு வரவில்லை. ஏவலாளர்களை அருணன் தங்கியிருந்த மாளிகைக்கு அனுப்பினார். அவர்கள் திரும்பி வந்து அருணன் நித்திரையில் இருப்பதாகக் கூறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் தில்லைப்பாண்டியனாரைச் சந்தித்த அருணன் தனது தவறுக்காக மன்னிப்புக் கேட்டான். இனிமேல் அப்படி நடக்கமாட்டேன் என்று கூறினான்.

தில்லைப்பாண்டியனார் அருணனை அழைத்துக் கொண்டு அரசனிடம் சென்றார். "அரசே அருணன் நல்ல அறிவாளி; கல்வியில் வல்லவன்; சிறந்த சிந்தனையாளன். இவையெல்லாம் ஒரு நல்ல ஆசிரியருக்குரிய பண்புகள். இவன் வேதாசலத்தின் மாணவனாக இருந்து மக்களுக்கு போதனை செய்தவற்குத்தான் தகுதியானவனே தவிர அரசசபைக்குரிய எவ்விதமான பொருத்தப்பாடும் இவனிடம் இல்லை. அரச சபையில் முக்கிய பதவி வகிப்போர் நித்திரை செய்தால் பகைவர்கள் சுலபமாக நாட்டைக் கைப்பற்றி விடுவார்கள். நேற்று அரசருடன் இரவு பதினொரு மணிக்கு வெளியே சென்று முக்கிய பிரமுகர் ஒருவரைச் சந்திக்க வேண்டும் என்று கட்டளையிட்ட போதும் அருணனால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பிறகு எப்படி அவனை அரசசபையில் முக்கிய வேலைக்கு அமர்த்திக் கொள்வது? நாட்டின் எல்லைப்புற காவல் வேலை செய்வதற்கே இவன் தகுதியற்றவன்" என்று கூறினார். சகல வித்தைகளைக் கற்றும் நித்திரை செய்வதைக் கட்டுப்படுத்தாததால் ஏற்பட்ட நட்டத்தை எண்ணிக் கவலைப்பட்டவாறு வீட்டிற்குச் சென்றான் அருணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது புதிய வெளியீடுகள்

## ஆங்கில ஆசான்

# தமிழ் மூலம் ஆங்கிலம்

ஆக்கம் : சட்டத்தரணி. கா. சிவசுப்பிரமணியம் **B.A (Cey)**

**தமிழில் ஆங்கில இலக்கண விதிகள், எளிய முறையில் விளக்கப்பட்டுள்ள பயனுள்ள நூல், ஆங்கிலத்தில் வியாபாரக் கடிதங்கள் மாணவர் கடிதங்கள் மற்றைய கடிதங்கள் எழுதும் முறைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. செய்முறைப் பயிற்சிகள் அதிகமாக சேர்க்கப்பட்டுள்ளன.**

**வியாபாரிகள் மாணவர்கள் அனைவருக்கும் பயன்தரும் நல்லதொரு தமிழ் நூல்.**

**விலை ரூபா. 195/-**

## ஆன்மீக நூல்கள்

| | ரூ. சதம் | | ரூ. சதம் |
|---|---|---|---|
| மாரியம்மன் தாலாட்டு | 10.00 | கேதார கௌரி விரதம் | 15.00 |
| கந்த சஷ்டி கவசம் | 7.00 | தூக்கை வழிபாடு | 10.00 |
| கந்த சஷ்டி கவசம் } ஆறுபடை வீடு | 15.00 | கவசத்திரட்டு | 75.00 |
| | | திருவாதவூரடிகள் புராணம் | 150.00 |
| தினசரி தோத்திரம் | 15.00 | இராம ஆஞ்சநேயர் பாடல் | 90.00 |
| தோத்திரத்திரட்டு | 25.00 | தோத்திரப் பாமாலை | 150.00 |
| திருவிளக்கு வழிபாடு | 10.00 | சைவ வினா விடை | 100.00 |
| மாருதி கவசம் | 15.00 | தோத்திரத்திரட்டு | 95.00 |
| அர்ச்சனைமாலை | 20.00 | வைகுந்த அம்மானை | 75.00 |
| அபிராமி அந்தாதி | 15.00 | சித்திரபுத்திரனார் கதை | 75.00 |
| பிள்ளையார் கதை | 15.00 | கோவில் வழிபாட்டு முறை | 25.00 |
| நித்திய கரும விதி | 5.00 | பஜனாவளி | 95.00 |
| பிள்ளையார் புராணம் | 69.00 | காரியசித்தி மாலை | 15.00 |
| நவராத்திரி பாமாலை | 15.00 | தமிழ் அர்ச்சனை | 20.00 |

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
320, செட்டியார் தெரு, கொழும்பு -11.
தொலைபேசி : 334004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அறிவுக் கதைகள்

36 கதைகள் உள்ளடக்கியது. விலை ரூபா. 60/-

# மாணவர் கதைக் களஞ்சியம்

25 கதைகள் கொண்டது. விலை ரூபா. 40/-

# பாலர்களுக்கான பல வர்ண நூல்கள்

| | | ரூபா. |
|---|---|---|
| பாலர் தமிழ் | - | 25.00 |
| இன்பத் தமிழ் மலர் | - | 50.00 |
| புதிய பாலர் தமிழ் | - | 25.00 |
| பாலர் தமிழ் அமுதம் | - | 60.00 |
| சித்திரத் தமிழ் மலர் | - | 90.00 |
| பாலர் தமிழ் மலர் | - | 40.00 |
| இனிய பாலர் தமிழ் | - | 35.00 |
| முன் பள்ளித் தமிழ் | - | 50.00 |
| முன் பள்ளிச் செயல் நூல் | - | 50.00 |
| ஆரம்ப பொது அறிவு | - | 75.00 |
| கலரிங் புத்தகம் | - | 50.00 |
| Colouring & Writing | - | 60.00 |
| பாப்பாப் பாட்டு | - | 30.00 |
| மழலைப் பாடல் | - | 50.00 |
| Moden ABC | - | 25.00 |

| | | ரூபா. |
|---|---|---|
| ABC Picture Book | - | 40.00 |
| ABC Book | - | 40.00 |
| நம்பரிங் புக் | - | 50.00 |
| ஆங்கிலப் பாடல்கள் | - | 50.00 |
| பாலர் கணிதம் | - | 40.00 |
| குழந்தை அரிச்சுவடி | - | 40.00 |
| ஆங்கில அரிச்சுவடி | - | 40.00 |
| சிங்கள அரிச்சுவடி | - | 40.00 |
| A.B.C. Picture | - | 50.00 |
| இனிய தமிழ் பயிற்சி | - | 40.00 |
| English Writing | - | 40.00 |
| நீதிநூல்கள் ஏழு | - | 60.00 |
| பாலர் பழகு தமிழ் | - | 40.00 |
| இனியதமிழ் இலக்கணம் | - | 95.00 |
| கோலக்கலை (156 கோலங்கள்) | - | 60.00 |

# பொது அறிவு

**வெற்றிக்கு வழிகாட்டும் அறிவுக் களஞ்சியம்**

**உங்களை உலகத்தோடு ஒருங்கிணையச் செய்யும் அற்புதப் புத்தகம்.**

**சகல பரீட்சைகளுக்குமான நூல்**

**விலை ரூபா. 195/-**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது தமிழ் அன்னை

ஆதியில் தோன்றிய நம் அன்னை
அழியாப் புகழைப் பெற்றவளாம்!
நீதியை உணர்த்தும் அன்னையவள்
நிகரில்லாத மொழி அரசி!


தேன்சுவை நூல்கள் தந்தவளாம்
தெளிவை நாட்ட வந்தவளாம்
வான் மழை போல வழங்கிடுவாள்
வாணர்கள் நாவில் முழங்கிடுவாள்!

இன்றும் இளமை கொண்டவளாம்!
இனிய பல் துறையில் வளர்பவளாம்
என்றும் தமிழே! நமதுயிராம்!
ஏத்தித்துதிப்போம் அவளடியை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆத்திசூடிக்கதைகள்


## நான்கு தொகுதிகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிவு : கௌரி அச்சகம் கொழும்பு - 13.

விலை ரூபா 75.00